கண் வைத்திய நிபுணர்கள்
சோதனை செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம்.
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 08 ஞாயிற்றுக்கிழமை (24 07 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 238

OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

ஜனாதிபதியை இலக்கு வைத்து தாக்குதல் நடத்துவதற்கு திட்டமாம்!

உளவுப் பிரிவினர் எச்சரிக்கை; அவரின் பொதுநிகழ்ச்சி குறைப்பு

கொழும்பு, ஜூலை 24

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தும் திட்டம் ஒன்று குறித்துத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக உளவுப் பிரிவினர் எச்சரித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் திட்டம் குறித்து மூன்று வாரங்களுக்கு முன்னரே ஜனாதிபதிக்கு அறியப்படுத்தப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் உத்தேச தாக்குதலை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டிருப்பவர்கள் யார் என்பதை உளவுப் பிரிவினர் வெளியிடவில்லை.

உளவுப் பிரிவினரின் எச்சரிக்கையைத் தொடர்ந்து ஜனாதிபதியின் பொது நிகழ்ச்சிகள் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கொலன்னாவில் ஐ. தே. க. பிரசாரக் கூட்டமேடை சரிந்து விழுந்த சம்பவத்தை அடுத்து இத்தகவலை உளவுப் பிரிவினர் இப்போது வெளியிட்டுள்ளனர்.

ஆனால் —

ஜனாதிபதி மீது தாக்குதல் நடத்தப்படும் சாத்தியம் இருப்பதாக புலனாய்வுப் பிரிவினர் ஜனாதிபதிக்கு ஏற்கனவே தெரிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

உளவுப் பிரிவினரின் எச்சரிக்கையைத் தொடர்ந்து — ஜனாதிபதி விஜேதுங்காவின் தேர்தல் பிரசாரப்பயணத்திட்டம் மீளாய்வு செய்யப்படுகிறது மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரசாரக் கூட்டங்களில் மட்டுமே ஜனாதிபதி கலந்து கொள்வார்.

ஜனாதிபதிக்கு நெருங்கிய வட்டாரங்களை மேற்கோள் காட்டி த ஐலண்ட் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

சதிப்புரட்சி

மேற்கு ஆபிரிக்க நாடான கம்பியாவின் ஆட்சியை அந்நாட்டு ஆயுதப்படையினர் இரத்தம் சிந்தாப் புரட்சி மூலம் கைப்பற்றியுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

அந்நாட்டு ஆயுதப்படையினருக்கான ஊதியத்தை அரசு நீண்டகாலமாக வழங்காது இருந்து வந்ததை தொடர்ந்து ஆத்திரமுற்ற படையினர் புரட்சி மூலம் ஆட்சியை கைப்பற்றியுள்ளனர்

நாளை வர்த்தக விடுமுறை

யாழ்ப்பாணம், ஜூலை 24

இசைப்பூமி வெற்றிநாளை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை விஷேட வர்த்தக விடுமுறை தினமாகும். வட பிராந்திய வர்த்தக சங்கங்களின் சமாசத்தின் கீழ் உள்ள அனைத்து வர்த்தக நிறுவனங்களும் நாளை மூடப்பட்டிருக்கும். (க-4)

யாழ். மாவட்டத்திற்கு

அத்தியாவசிய பொருள்கள் தொடர்ந்து கிடைக்கும்

பிரதமர் ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 24

யாழ். மாவட்டத்திற்கு வழமைபோல் உணவு, அத்தியாவசியப் பொருள்கள் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் அனுப்பப்படும் என்று பிரதமர் ரணில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டம் காலாவதியானதால் புனரமைப்பு, புனர்வாழ்வு வேலைகளோ அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்கள கடமைகளோ பாதிக்கப்படமாட்டா எனவும் அவர் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுவிட்டதால் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பிரிவு இயங்காது என்றும்—

வடபகுதிக்கு அத்தியாவசிய பொருள்களை அனுப்பும் பொறுப்பை யாரிடம் ஒப்படைப்பது என்பது குறித்துக் குழப்பம் நிலவுவதாகவும் முன்னர் செய்திகள் வெளிவந்தது தெரிந்ததே. (த-அ)

சந்திரிகாவே பிரதமர் குழப்ப நிலை நீங்கியது

கொழும்பு, ஜூலை 24

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டினால் பிரதமராக நியமிப்பது யாரை என்பதில் நிலவிய குழப்ப நிலை தற்போது முடிவுக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது:

தாம் அமைக்கும் நாடாளுமன்ற அரசின் ஆட்சித் தலைவியாக அல்லது பிரதமராக திருமதி சந்திரிகா குமாரணதுங்காவையே நியமிப்பது என்றும் —

உத்தியோகபூர்வமான ஜனாதிபதிப்பதவியை அவரது தாயாரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு வழங்குவது என்றும் முன்னணியின் தலைவர்கள் கடந்த வியாழன்று கூடி முடிவு செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

தாக்குதலை நிறுத்துமாறு மாநகரசபை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 24

நல்லூர் உற்சவ காலத்தின் போது யாழ். மாநகரசபை பிரதேசத்தில் இராணுவத் தாக்குதல்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு மாநகரசபையால் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவிடம் கேட்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக செஞ்சிலுவைச் சங்க சர்வதே

(6 ஆம் பக்கம் பார்க்க)

பிரபாவுடன் இரகசியஒப்பந்தம் பொ. ஐ. மு. செய்யவிருக்கிறது

ஜனாதிபதி டி. பி. வெளியிடும் தகவல்

கொழும்பு, ஜூலை 24

"தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுடன் இரகசிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முன்வந்துள்ளது எங்களுக்குத் தெரியவந்துள்ளது.

"விரைவில் அப்படியான ஒப்பந்தம் ஒன்றை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி செய்து கொண்டாலும் நான் ஆச்சரியப்படமாட்டேன்."

— இவ்வாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கூறியிருக்கிறார்.

பலப்பிட்டிய, மொறப்பொல வீரபுரன் அப்பு பூமோ மற்றும் கிரிந்திவெல ஆகிய இடங்களில் நடைபெற்ற ஐ. தே. கவின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தால் வடக்கு — கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படும். அதன் மூலம் நாடு பிளவுபடும். நாட்டைப் பிரிக்கவே பொதுமக்கள் ஐக்கிய முன்னணி திட்டமிட்டிருக்கிறது.

ஆனால் நாட்டின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் பேண ஐ. தே. க. உறுதி பூண்டுள்ளது.

வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஐக்கிய தேசியக் கட்சியினால் மட்டுமே முடியும்.—இவ்வாறு ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார். (உ-எ)

லண்டனில் கறுப்பு ஜூலை

1983 கறுப்பு ஜூலை நாளின் 11 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நேற்று லண்டன் நகரில் நூற்றுக் கணக்கான தமிழர்கள் கூடி பேரணி ஒன்றை நடத்தினர்.

ஆண்களும் பெண்களும் கோஷங்களை எழுப்பியவாறு பேரணியில் கலந்து கொண்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



இவைகளுக்குள்ள இழுபறி முடியமுன் தேர்தல் வந்திடும் பாருமேகோ......!

கூரையுடன் மேடை இடிந்து வீழ்ந்த சம்பவம்:

இடிபாடுகளுக்குள் இருந்து டி.பியை இழுத்து எடுத்தனர்!

கொழும்பு, ஜூலை 24

கடந்த புதனன்று மாலை ஐ. தே. கவின் கொலன்னாவை தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் சரிந்து விழுந்த மேடையுடன் கீழே விழுந்த ஜனாதிபதி விஜேதுங்காவை, அவரது பாதுகாப்பு அதிகாரிகள் மேடைக்கூரைக்குள் இருந்து இழுத்து வெளியே எடுத்தனர் என்று பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இடிபாடுகளுக்குள் இருந்து வெளியே வந்த ஜனாதிபதி தாம் சுகமே இருப்பதாகவும் அமைச்சர் நந்தா மத்தியூவின் நிலை எப்படி என்றும் தமது பாதுகாப்பு அதிகாரிகளைக் கேட்டார்.

இச்சம்பவம் குறித்து மேடையில் ஜனாதிபதிக்கு அருகில் அமர்ந்திருந்த அவரின் சிரேஷ்ட (தகவல்) உதவிச் செயலாளர் அன்ரனி பெர்னாண்டோ கூறியதாவது:-

மேடையில் இருந்த ஒருவருமே காயமடையவில்லை இது ஓர் அதிசயம் போலிருக்கிறது. மேடை சரியத் தொடங்கியதும் யாரோ ஒருவர் மேடைக்கான மின்சார இணைப்பைத் துண்டித்து விட்டார். இல்லாவிட்டால் நாமெல்லோரும் மின்சாரத் தாக்குண்டிருப்போம்.

மேடை இடிபாடுகளுக்குள் இருந்து எழுந்த ஜனாதிபதி சஞ்சலம் ஏதுமின்றிக் காணப்பட்டார் என்றார்.

சதிச் செயலா என்பது குறித்து தலைவர்கள் கருத்து வேறுபாடு

கொழும்பு, ஜூலை 24

கொலன்னா தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மேடை இடிந்து விழுந்த சம்பவம் சதிச் செயலா என்பது குறித்து ஐ. தே. க. தலைவர்கள் முரண்பாடான கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

நாசவேலையே காரணம் என்பதற்கான தகவல்கள் தமக்குக் கிடைத்துள்ளதாக ஐ தே கவின் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா தெரிவித்துள்ளார்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

நிரந்தர தீர்வுக்குத் திட்டம் சந்திரிகாவிடம் உள்ளதாம்!

கொழும்பு, ஜூலை 24

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான திட்டங்கள் எம்மிடம் உள்ளன.

இவ்வாறு கூறினார் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க.

கேகாலை மாவட்டத்தில் அரநாயக்கா, திப்பிட்டிய, கொட்டியாக்கும்புர, ருவான்வெல ஆகிய இடங்களில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

17 வருடங்களாக ஆட்சி செய்த ஐ. தே. கவினால் வடக்கு கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை; தீர்வுத் திட்டமும் அரசிடம் இல்லை. இந்த யுத்தத்தினால் கோடிக்கணக்கான ரூபா பணம் விரயமாகி வருகிறது. நாட்டில் கொலை, கொள்ளை. ஊழல் அதிகரித்து வருகின்றன

தேசிய சொத்துகள் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு தாரைவார்க்கப்படுகின்றன, மக்களுக்கு உண்மையைக் கூற சுதந்திரமில்லை. பத்திரிகைச் சுதந்திரமும் இல்லை.

திறந்த பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் பெரும் மோசடிகள் நடக்கின்

(5ஆம் பக்கம் பார்க்க)

நெடுந்தீவுக்கு அருகில் 6 இந்திய மீனவர் கைது

யாழ்ப்பாணக் கடல் எல்லைக்குள் பிரவேசித்ததாக ஸ்ரீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 6 இந்திய மீனவர்களையும் ஸ்ரீலங்கா அரசு தமிழகத்துக்குத் திருப்பி அனுப்பவிருக்கிறது.

நெடுந்தீவில் தற்போது இருக்கும் இந்த மீனவர்களை ஒப்படைப்பதற்கு வசதியான திகதியை அறிவிக்குமாறு கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் தமிழக அரசைக் கேட்டுள்ளார்.

இந்திய மீனவர்கள் இரவு நேரத்தில் நெடுந்தீவுக்கு அருகில் வந்தபோது அவர்களைத் தவறாகப் புரிந்து கொண்டதாகவும்—

அவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச)

தேர்தல் பிரசாரத்துக்காக

திருமலை சென்ற ரணிலுக்கு மாலை அணிவிக்கவும் தடை

அங்கு பாதுகாப்புத் தீவிரம்

கொழும்பு, ஜூலை 24

திருகோணமலையில் தேர்தல் பிரசாரம் நடத்துவதற்கு வந்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு மாலை அணிவிக்கக் கூட எவரும் அனுமதிக்கப்படவில்லை, அவ்வளவுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

கடந்த வியாழனன்று திருமலை ஜமாலியாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் உரையாற்றினார். பிரதமரை எவரும் நெருங்க முடியாத வகையில் அங்கு பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டிருந்தது. (ம)

அஹத் கப்பல் வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

சென்னை, ஜூலை 24

கடலில் மூழ்கடிக்கப்பட்ட 'அஹத்' கப்பலில் இருந்து கைது செய்யப்பட்ட 9 பேருக்கு எதிரான விசாரணையை நடத்திவரும் விசாகப்பட்டினம் மாவட்ட நீதிபதி வாமன்ராவ் வழக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இந்தியாவுக்குள் ஆயுதங்களைக் கடத்த முயன்றது

இந்திய கப்பற் படைக் கப்பல்களை நோக்கிச் சுட்டது.

வெடிமருந்துகளையும் குண்டுகளையும் கொண்டு சென்றது ஆகிய குற்றச்சாட்டுகளை இந்த 9 பேரும் எதிர்நோக்கி உள்ளனர்.

வழக்கின் [illegible] அரசாங்க சட்டத்தரணியான [illegible] ராமச்சந்திரன் [illegible] பாளர்களிடம் பேசுகையில், சந்தேக நபர்கள் மீது எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படும் என்று கூறினார்.

'ஜசீந்தா' என்பது தான் பிரஸ்தாப கப்பலின் பதிவுப் பெயர். 1993 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் உள்ள ஹொண்டுராஸ் தூதரகத்தில் கப்பல் பதிவு செய்யப்பட்டது

சிங்கப்பூருக்கும் தாய்லாந்துக்கும் இடையில் அது போக்குவரத்துச் செய்தது.

அக்கப்பலின் முதலாவது "ஜ" எழுத்தையும் கடைசி "ஏ" எழுத்தையும் அழித்துவிட்டு 'அஹத்' என்ற பெயரில் சட்டவிரோத வேலைகளுக்கு அக்கப்பல் பயன்படுத்தப்பட்டதாக [illegible] மேலும் [illegible].

தோலகட்டி நெல்லிரசம் மீண்டும் உற்பத்தி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

நெல்லிரசம் தயாரிப்பதற்கு தோலகட்டி ஆச்சிரமத்திற்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு நீக்கப்பட்டிருப்பதாக தமிழீழ தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

உற்பத்தியை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அனுமதி அந்த நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் —

தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தின் தரநிர்ணய ஒழுங்கு விதிகளின்படி அந்த நிறுவனம் செயற்படுமென்றும் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் இளைஞருக்கு சிறைத் தண்டனை!

ஒஸ்லோ, ஜூலை 24

போலி பாஸ்போர்ட் மற்றும் தஸ்தாவேஜுகளைப் பயன்படுத்தி 20 இலங்கைத் தமிழர்கள் நோர்வே நாட்டினுள் குடியேற உதவியதற்காக 20 வயது இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவருக்கு நோர்வே நீதிமன்றம் ஒன்று பதினெட்டு மாத கால சிறைத் தண்டனை விதித்துள்ளது.

தண்டனை பெற்ற இளைஞர் நோர்வே நாட்டின் பிரஜாவுரிமை பெற்றவர் என்று அறிவிக்கப்படுகிறது.

கொழும்பு - வவுனியா ரயில் சிராவஸ்திபுரவில் சோதனை

வடபகுதிப் பயணிகள் மீது படையினர் கெடுபிடி

கொழும்பு, ஜூலை 24

கொழும்பில் இருந்து வவுனியா செல்லும் இரவு தபால் ரயிலில் பயணம் செய்யும் வடபகுதிப் பயணிகள் அனுராதபுரத்தில் உள்ள சிராவஸ்திபுர ரயில் நிலையத்தில் இறக்கப்பட்டு படையினரால் சோதனை செய்யப்படுகின்றனர்.

அண்மையில் அனுராதபுரம் ரயில் நிலையப் பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தின் பின்னரே படையினர் சிராவஸ்திபுரவில் ரயிலை நிறுத்தி இந்த சோதனை நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

'சிராவஸ்திபுர' ரயில் நிலையத்தை அந்த ரயில் தினமும் அதிகாலை 3 30 மணியளவில் சென்றடைகிறது.

உறக்கத்தில் இருக்கும் பயணிகள் படையினரால் தட்டி எழுப்பப்பட்டு மூடை முடிச்சுகளுடன் இறக்கப்படுகின்றனர் பின்னர் அந்த ரயில் அடுத்த மேடைக்கு கொண்டு செல்லப்படுகிறது.

அந்தச் சமயத்தில் மேடையில் வைத்து பயணிகள் சோதனையிடப்படுகின்றனர்: அவர்களது பொதிகளும் பலத்த சோதனைக்கு உள்ளாகின்றன.

அதன் பின்னரே பயணிகள் மீண்டும் ரயிலில் ஏற அனுமதிக்கப்படுகின்றனர்

இதேபோன்று மதவாச்சி ரயில் நிலையத்திலும் சில சமயங்களில் ரயில் நிறுத்தப்பட்டு சோதனையிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-ஐ)

வாஷிங்டனில் ஹுசேய்ன்- ரபீன் உச்சிப் பேச்சுக்கள்

அரபு- இஸ்ரேல் உறவில் மற்றொரு மைல் கல்!

சாதாத்— அரபாத் பாதையில் ஜோர்தானையும் இழுக்க முயற்சி

ஜோர்தான் மன்னர் ஹுசெய்னும் (Hussein) இஸ்ரேல் பிரதமர் யிட்ஷாக் ரபீனும் (Yitzhak Rabin) நாளை 25 ஆம் திகதி வாஷிங்டனில் சந்தித்துப் பேச உள்ளனர்.

1948 ஆம் ஆண்டு இஸ்ரேல் என்ற நாடு யூதர்களால் பிரகடனம் செய்யப்பட்ட பின்னர் ஜோர்தானிய இஸ்ரேல் தலைவர்கள் பகிரங்கமாகச் சந்திப்பது இதுவே முதல் தடவை.

நாளைய சந்திப்பு இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையிலான உறவில் மற்றொரு மைல் கல் என்று அவதானிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

1979 ஒப்பந்தம்

ஏற்கனவே 1979 ஆம் ஆண்டு அப்போதைய அமெரிக்க — இஸ்ரேலிய — எகிப்திய ஆட்சித்தலைவர்களான ஜிம்மி கார்ட்டர், பெகின், அன்வர் சாதாத் ஆகியோருக்கிடையில் செய்து வைக்கப்பட்ட காம்ப் டேவிட் ஒப்பந்தம் மூலம் எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் இருந்து வந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டது.

எகிப்துடன் ஒப்பந்தம் செய்தது மூலம் இஸ்ரேல் தனது பலம் வாய்ந்த எதிரி நாடு ஒன்றுடனான யுத்த நிலையை முடிவுக்குக் கொண்டுவந்தது.

இஸ்ரேலுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டதற்காக அன்வர் சாதாத் இஸ்லாமிய தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1993 ஒப்பந்தம்

1993 செப்டம்பர் மாதம் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸீர் அரபாத்துக்கும் இஸ்ரேல் பிரதமர் யிட்ஷாக் ரபீனுக்கும் இடையில் வாஷிங்டனில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் மூலம் ஜோர்தானின் மேற்குக் கரையில் உள்ள ஜெரிக்கோவிலும் காஸாவிலும் பலஸ்தீனர்களுக்கு சுயாட்சி வழங்க இஸ்ரேல் இணங்கி உள்ளது.

இந்த ஒப்பந்த அமுலாக்கல் பெரும் இழுபறிகளின் மத்தியிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1982 ஆம் ஆண்டு முதல் டுனிஸில் (Tunis) தனது தலைமையகத்தை வைத்திருந்த யாஸீர் அரபாத் முதல் தடவையாக தனது தாயக மண்ணான ஜெரிக்கோவில் தற்போது நிரந்தரமாகக் குடியேறிவிட்டார்.

பலஸ்தீன விடுதலை இயக்கம் முதலில் ஜோர்தானிலேயே தனது தலைமையகத்தை அமைத்திருந்தது.

1970 — 71 ஆம் ஆண்டுகளில் ஜோர்தானிய இராணுவத்துக்கும் பலஸ்தீன விடுதலை இயக்கப் போராளிகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

அரபாத் தனது சகாக்களுடன் ஜோர்தானில் இருந்து வெளியேறி லெபனானில் தலைமையகத்தை அமைத்தார்.

1982 ஆம் ஆண்டு லெபனானுக்குள் படை எடுப்பு நடத்திய இஸ்ரேல் படைகள் தலைநகர் பேருட் வரை முன்னேறி பலஸ்தீன விடுதலை இயக்கத்தை முற்றுகையிட்டன

பலஸ்தீன விடுதலை இயக்கம் பூண்டோடு அழிக்கப்பட இருந்த சமயம் சர்வதேச தலையீடு ஏற்பட்டது.

பல் நாட்டுப் படைகளின் மேற்பார்வையில் யாஸீர் அரபாத்தும் பலஸ்தீன விடுதலை இயக்கப் போராளிகளும் லெபனானில் இருந்து பாதுகாப்பாக வெளியேற அனுமதிக்கப்பட்டனர்.

சமீபத்தில் ஜெரிக்கோவுக்கு தனது தலைமையகத்தை மாற்றும் வரை டுனிஸிலேயே பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைமையகம் இயங்கி வந்தது.

1967 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆறு நாள் யுத்தத்தின் போது எகிப்து சினாய் பாலைவனத்தையும், காஸாவையும் இஸ்ரேலிடம் இழந்திருந்தது.

அரபாத்

ஜோர்தான், ஜோர்தான் நதிக்கு மேற்கே உள்ள (West Bank) பகுதியை இழந்தது.

சிரியா கோலன் குன்றுகளை (Golan Heights) இழந்தது.

எஞ்சி இருப்பது சிரியாவே

நாளை வாஷிங்டனில் ஆரம்பமாக உள்ள ஹுசெய்ன் — ரபீன் பேச்சுவார்த்தையின் போது ஜோர்தானின் மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெருஸலம் பற்றி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு விடுமானால் எஞ்சி இருப்பது சிரியாவுடனான பிரச்சினை தான்.

1967 யுத்தத்தில் கோலான் குன்றுகளை இழந்த சிரியா 1973 யுத்தத்தின் போது அதனை மீளப்பெற போரிட்டது.

ஆனால் இஸ்ரேல் படைகள் கடுமையாகப் போரிட்டு சிரியப் படைகளை பழைய எல்லைக்கு விரட்டி அடித்தன.

கோலான் குன்றுகள் தனது பாதுகாப்புக்கு அவசியமானவை என்று இஸ்ரேல் கருதுகிறது.

ஏற்கனவே அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன் சிரியா ஜனாதிபதி ஹாபேஸ் அல் அஸாதை (Hafez Al-Assad) சந்தித்துப் பேசி உள்ளார்.

1991 வளைகுடா யுத்தத்தின் போது 20 ஆயிரம் சிரியப் படைகள் அமெரிக்கா தலைமையிலான நேச நாடுகளின் படைகளுடன் இணைந்து ஈராக்குக்கு எதிராகப் போராடின.

இந்த சம்பவம் அமெரிக்காவுக்கும் சிரியாவுக்கும் இடையிலான நீண்டகால இடைவெளியை குறைக்க உதவியது.

எனினும் கோலான் குன்றுகளில் இருந்து இஸ்ரேல் தனது படைகளை ஒரே தடவையில் வாபஸ் பெற்றுவிட வேண்டும் என்று சிரியா கோருகிறது.

படிப்படியாக எட்டு வருட காலத்தில் படை வாபஸ் இடம்பெற வேண்டும் என்ற அமெரிக்க யோசனையை சிரிய ஜனாதிபதி எதிர்க்கிறார்.

ரபின்

லெபனானும் சம்பந்தம்

சிரியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான பிரச்சினையில் லெபனானும் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளது.

சிரியாவின் பிரச்சினை தீரும் போது லெபனான் பிரச்சினையும் தீர்ந்துவிடும்.

1982 ஆம் ஆண்டு முதல் தென் லெபனானில் இஸ்ரேல் படைகள் நிலை கொண்டுள்ளன.

லெபனானில் தற்போது சிரியாவுக்கு ஆதரவான அரசு ஒன்றே இயங்கி வருகிறது. இந்த அரசுக்கு ஆதரவாக சிரியா அங்கு 30 ஆயிரம் வீரர் கொண்ட படை ஒன்றை வைத்துள்ளது.

கிளின்ரன்

லெபனானில் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான நீண்டகால உள்நாட்டு யுத்தத்தில் கிறிஸ்தவ படைகள் தோற்கடிக்கப்படுவதற்கும் — 10 ஆண்டுகளுக்கு முன் லெபனானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறுவதற்கும் சிரியாவே காரணமாக இருந்தது.

நாளை வாஷிங்டனில் ஜோர்தானிய — இஸ்ரேல் தலைவர்களுக்கிடையில் நடைபெற உள்ள சந்திப்பு மூலம் பிராந்தியத்தின் ஸ்திர நிலையில் பெரிய ஒரு அடி எடுத்து வைக்கப்படுவதாக அமெரிக்கா கருதுகிறது.

மூன்று வருடகால முயற்சி

ஜோர்தான் மன்னர் ஹுசெய்னையும் இஸ்ரேல் பிரதமர் ரபீனையும் பேச்சு வார்த்தை மேடைக்கு அழைக்கும் முயற்சியில் அமெரிக்கா கடந்த மூன்று வருடங்களாக ஈடுபட்டு வந்தது.

ஸ்பெயினின் தலைநகரான மெட்ரிட்டிலும் வாஷிங்டனிலும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பலனே நாளைய சந்திப்பு எனலாம்.

நாளைய வாஷிங்டன் பேச்சுக்களுக்கு சர்வதேச அரங்கில் பெரும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

இதற்கான ஆயத்தப் பேச்சுகள் இவ் வாரம் ஏற்கனவே தலைநகர் அம்மானில் (Amman) நடந்து முடிந்துள்ளன

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் வாரன் கிறிஸ்ரோபர் (Warren Christopher) இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் ஷிமோன் பெரேஸ் (Shimon peres) ஜோர்தானிய வெளிவிவகார அமைச்சர் அப்துல் — சலாம் அல் மஜாலி (Abdul — Salam Al Majali) ஆகியோர் அம்மான் பேச்சுக்களில் கலந்து கொண்டனர்

ஜோர்தான் மன்னரும் இஸ்ரேல் பிரதமரும் வாஷிங்டனில் அமெரிக்க நாடாளுமன்றத்தின் இரு சபைகளின் கூட்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தவும் —

வெள்ளை மாளிகையில் இரவு விருந்து ஒன்றில் பங்குபற்றவும் ஏற்பாடாகி உள்ளது.

72 வயது நிரம்பிய ரபீன் ஒரு போர் வீரனாக இருந்து அரசியல் வாதியானவர்.

1967 யுத்தத்தில் இஸ்ரேல் படைகளின் பிரதம தளபதியாக கடமையாற்றியவர்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் பிரதமராகப் பதவி ஏற்றபோது அரபு நாடுகளுடன் சமாதான முயற்சிகளை மேற்கொள்ளப் போவதாக இஸ்ரேல் மக்களுக்கும் உறுதி அளித்திருந்தார்.

ஜோர்தான் மன்னர் ஹுசெய்னுடன் உடனடியாக சமாதான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகும் சாத்தியம் இல்லாவிட்டாலும் நாளைய சந்திப்பு இதற்கான பாதையைத் திறந்து விடும் என்பதில் சந்தேகம் இல்லை.

★

சஞ்சாரன்

1920 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் கொண்டு வரப்பட்ட ஜோர்தான் இஸ்ரேலின் எல்லையில் உள்ள ஒரேஒரு மன்னர் ஆட்சி நாடு ஆகும்.

ஜோர்தானின் மேற்குக் கரையில் உள்ள ஜெரிக்கோ நகரம் உலகிலேயே பழைமை வாய்ந்த நகரங்களில் ஒன்று.

இஸ்ரேலும் ஜோர்தானும் நீண்டகால வரலாற்றினால் பின்னிப் பிணைந்தவை.

இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட யுத்தங்கள் காரணமாக லட்சக்கணக்கான பலஸ்தீன அகதிகள் ஜோர்தானில் தற்போது வசித்து வருகின்றனர்.

இந்த அகதிகளின் வருகை ஜோர்தானின் இனவிகிதாசாரத்தை மாற்றி அமைத்ததுடன் ஜோர்தானின் அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது

1948 இல் இஸ்ரேல் உருவாக்கப்பட்ட பின்னர் இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையில் நான்கு பிரதான யுத்தங்கள் நடந்துள்ளன

1948 — 49 யுத்தம்

1948 மே 14 இல் இஸ்ரேல் என்ற நாடு பிரகடனம் செய்யப்பட்டவுடன் எகிப்து, ஜோர்தான், ஈராக், சிரியா, லெபனான் ஆகிய நாடுகள் இஸ்ரேலுக்கு எதிராகப் போர் தொடுத்தன.

யுத்தம் ஆரம்பித்தவுடன் பலஸ்தீனத்தில் யூதர்களின் பகுதி அல்லாத தெற்கு கிழக்கு பலஸ்தீன பகுதிகளை அரபு நாடுகளின் படைகள் கைப்பற்றின எனினும் இஸ்ரேல் படைகள் ஜெருஸலத்தின் பிரதான பாதையை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து நடத்திய தாக்குதலின்போது காஸா தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இருந்து அரபு நாடுகளின் படைகள் விரட்டியடிக்கப்பட்டன.

1956 சூயஸ் யுத்தம்

1956 ஆம் ஆண்டு அப்போதைய எகிப்திய ஜனாதிபதி காமல் அப்துல் நாஸார் Gamal Abdel Nassar சூயஸ்கால்வாயை எகிப்துக்குச் சொந்தமாக்கிய போது இஸ்ரேல் சினாய் பாலைவனத்துக்குள் படை எடுப்பு நடத்தியது— இஸ்ரேல் படைகள் ஆயிரக்கணக்கான அரபுகளைச் சிறைப்பிடித்து எகிப்தின் இராணுவ முகாம்களை நிர்மூலமாக்கின; 1957 ஆம் ஆண்டு சர்வதேச நிர்ப்பந்தம் காரணமாக இஸ்ரேல் படைகள் பழைய எல்லைக்கு பின்வாங்கின.

1967 யுத்தம்

1967 ஜூன் யுத்தத்தில் ஜோர்தானின் மேற்குக் கரை, சினாய் பாலைவனம், காஸா, கோலான் குன்றுகளை இஸ்ரேல் கைப்பற்றியது.

1973 யுத்தம்

யூதர்களின் புனித தினமான யொம் கிப்பூர் (Yom Kippur) தினத்தில் எகிப்தும் சிரியாவும் இஸ்ரேல் மீது தாக்குதல் தொடுத்தன—இந்த யுத்தத்தில் சிரிய படைகள் பழைய எல்லைக்கு விரட்டியடிக்கப்பட்டன மற்றைய முனையில் இஸ்ரேல் படைகள் சூயஸ் கால்வாயைக் கடந்து சூயஸின் மேற்குக் கரைக்குள் பிரவேசித்து எகிப்திய படைகளை சுற்றிவளைத்தன. பின்னர் போர் நிறுத்தம் ஏற்பட்டது.

சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

❋ ❋ ❋

புலிகளின் குரல் வானொலியில்

24 — 07 — 1994

ஞாயிறு இரவு

- ★ 8-01 — இசையரங்கம் — பாடுபவர் செல்வி க. தாமிகா அவர்கள்
- ★ 8-20 — தாயகப் பாடல்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தொடர் நாடகம் — இலங்கை மண் 83ஆம் அங்கம்

25 — 07 — 1994

திங்கள் காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — மணியாரம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப் பாடல்கள்

நல்லூரில் கம்பன் விழா இன்று இறுதிநாள் நிகழ்வுகள்

காலை ஐயம்தெளி அரங்கு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 24

அகில இலங்கை கம்பன் கழகத்தின் கம்பன்விழா — இறுதிநாளான — ஐந்தாம் நாள் நிகழ்ச்சிகள் — இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்.

கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தொடக்கவுரையையும் வண. பிதா பிரான்சிஸ் யோசெப் அடிகளார் வாழ்த்துரையையும் நிகழ்த்துவார்கள் பின்னர் ஐயம் தெளி அரங்கு நிகழ்ச்சி இடம்பெறும்.

மாலை நிகழ்ச்சிகள் 4-30 மணிக்கு யாழ்ப்பாண உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா தலைமையில் நடைபெறும்.

தொடக்கவுரையை கல்விப் பணிப்பாளர் வலயம்-1 செல்வி தி பெரியதம்பியும், வாழ்த்துரையை வைத்திய கலாநிதி ரி. டபிள்யூ. ஜெயகுலராஜாவும், நிறைவுரையை யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் நிகழ்த்துவார்கள்.

இன்றைய விழாவில் கம்பன் கழக [illegible] அமரர்கள் வித்துவான் சி. குமாரசாமி திரு. ஆ. கனகசபாபதி ஆகியோரின் உருவப் படத்திறப்பும் அஞ்சலியும் —

"ஆலிங்க காதை சிறந்து உயர்ந்து பெரிதும் செழுமை பெறுவது யார் வண்ணத்தில்" என்னும் பொருளில் இலக்கிய ஆணைக்குழுவும் —

கலாவினோதன் நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி) குழுவினரின் 'இருவரங்கள்' வில்லிசை நிகழ்ச்சியும் இடம் பெறும்.

இறுதி நிகழ்ச்சியாக யாழ் திருமறைக் கலாமன்றம் வழங்கும் 'கும்பகர்ணன்' இலக்கிய நாடகம் இடம்பெறவுள்ளது.

பெண் மரணம்

மாத்தளை தெனுவர விஷ்ணு ஆலயத்தில் நேற்று நடந்த பெரஹரா நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தோர் மீது சுவர் ஒன்று இடிந்து விழுந்ததில் பெண் ஒருவர் [illegible] 45 பேர் வரை காயமடைந்தனர்.

யாழ். கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலைய அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசு இல:- 1068 2 ஆம் பரிசு இல:- 1361

3 ஆம் பரிசு இல:- 2817

ஆறுதல் பரிசுகள் இலக்கங்கள்:-

1337. 0340. 1488. 0187. 0566

பரிசுப் பொருட்களை 31-7-94 ஞாயிறு பிற்பகல் 4.30 மணிக்கு நிலையத்தில் பெறலாம்.

நிர்வாகம் சார்பில்
க. விக்கி

(7281)

பேராசிரியருக்கு இன்று மணிவிழா

யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகத்தின் மணிவிழா இன்று முற்பகல் 9 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்விக் கழகத் தலைவர் திரு கோ. செல்வநாயகம் விழாவுக்குத் தலைமை வகிப்பார் விழாவில் பலர் வாழ்த்துரை வழங்கவுள்ளனர். மணிவிழா நூல் வெளியீடும் அங்கு இடம்பெறும் விழாவின் இறுதியில் விழா நாயகர் பொன்னாடை போர்த்து பதக்கம் சூட்டப்பட்டு கௌரவிக்கப்படுவர்.

இன்று

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் கடந்த இரு மாதங்களாக நடைபெற்று வந்த உடற்கல்வியும் விளையாட்டுக்களும் என்ற அடிப்படைக் கற்கை நெறியின் நிறைவுவிழாவும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் நடைபெறும். (ச-152)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 24

அஞ்சல் தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கத்தின் யாழ் கிளை அங்கத்தவர்களுக்கான வருடாந்த கலந்துரையாடல் இன்று [illegible] பிரதம தபாலகத்தில் நடைபெறும். [illegible]

இழுவைப் பெட்டி உற்பத்தியாளர் கவனத்துக்கு

உழவு இயந்திரங்கள், இருசக்கர உழவு இயந்திரங்கள் ஆகியவற்றின் இழுவைப் பெட்டிகளை உற்பத்தி செய்பவர்கள் அனைவரும் நாளை (திங்கள்) முதல் தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் அதற்கான அனுமதியை பெற்றுக் கொள்ளுமாறும் —

அனுமதியை பெறாமல் இழுவைப் பெட்டிகளை உற்பத்தி செய்வோர் மீது தமிழீழ காவல்துறையினரும், மோட்டார் ஊர்திப் பதிவு பகுதியினரும் சட்ட நடவடிக்கை மேற்கொள்வர் என்றும் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்தி பதிவுப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (ஐ)

கீன் சென்ரர்
திருநெல்வேலி
A/L 95, 96
இந்து நாகரிகம்
இந்து சமயம்
ஆசிரியர்;-
காரை. எஸ். கெங்கா
(1) அனுமதிகளை உடன் பெறவும்.
(2) வகுப்புக்கள் ஒழுங்காக நடைபெறுகின்றன.
(8644)

அளவெட்டி
பெருமாக்கடவைப் பிள்ளையார் கோவில்
தொண்டர் சபை நடத்தும்

மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

காலம்:- 31-07-94 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2 மணி
இடம்:- சந்திரோடை மைதானம்.
A பிரிவு: 1 ஆம் பரிசு தங்கப்பதக்கம்
B பிரிவு: 1 ஆம் பரிசு தங்கப்பதக்கம்
C பிரிவு: 1 ஆம் பரிசு தங்கப்பதக்கம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளம்பர அன்பளிப்பு:
இ. அருணாசலம்.
(ஐயா அண்ணை)
(7280)

மரண அறிவித்தல்

மாரிமுத்து கனகரத்தினம்

(இளைப்பாறிய எழுதுவினைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி)

தொல்புரம் கிழக்கு சுழிபுரத்தைச் சேர்ந்த மாரிமுத்து கனகரத்தினம் அவர்கள் 23-07-1994 அன்று இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும், ஆனந்தராசா (சவுதி), தவராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (24-07-94) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக மூளாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வே. சிவநேசன் (மருமகன்).
தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.
[32066]

ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம் தமிழீழ ஆடிவேல் விழா சிறப்பிதழ்

25, 26, 27 - 07 - 1994

உ
குமமயம்

ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம்

''தீர்த்த உற்சவமும் பாராட்டு விழாவும்"

காலம்: இன்று (24 - 07 - 94) ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு தீர்த்தம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து ஆடிவேல் விழாவிற்கான இரத வெள்ளோட்டமும் சிற்பக்கலைஞர்களுக்கு பாராட்டு விழாவும் நடைபெறும்.

இரவு 8 00 மணிக்கு
தேவஸ்தானத்தால் பாராட்டு கௌரவிக்கப்படும் சிற்பக்கலைஞர்கள்

"சில்பபிரமசிற்பகலைஞர்" திரு. ஆறுமுகம் கந்தசாமி ஆசாரியார் அவர்கள் திருநெல்வேலி	'சிற்பக்கலைஞர், திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் நாயன்மார்கட்டு

நிகழ்ச்சி நிரல்

இறைவணக்கம்:

வரவேற்புரை:
பிரம்மஸ்ரீ இரா. சந்திரசேகரசர்மா
(ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியரும், பொருட் உத்தியோகத்தரும்)

தலைமை உரை,
திரு. அ. முத்துக்கிருஷ்ணன்
(தலைவர், திருநெல்வேலி சிவகாமசுந்தரி கோயில் B. A. இலங்கை, L. L. B. லண்டன்)

ஆசி உரை:
நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
(தலைவர் இந்து நாகரிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்)
திரு. பொ. தியாகராஜா
(சட்டநாதர் ஆலயத் தலைவர்)
திரு. என். இராஜதேவன்
(தலைவர், வண்ணை வீரமாகாளி அம்மன் கோயில்)
திரு. கந்தப்பச் செட்டியார் வைத்திலிங்கம்
(வண்ணை வைத்தீஸ்வரர் ஆலய அறங்காவலர்)
திரு. ச. சந்தசாமி
(தலைவர், வண்ணை நாச்சிமார் கோயில்)
வைத்தியகலாநிதி திரு. இ. அருட்பிரகாசம்
(தலைவர், கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம், முன்னாள் வடபிராந்திய சுகாதார அத்தியட்சகரும்)
திரு. இ. வாமதேவன்
(பண்டாரக்குளம் பிள்ளையார் கோயில் - தர்மகர்த்தா)

வாழ்த்துரை:
மறைதிரு. அன்னைதாசன்
ஸ்கந்த சாம்ப சிவ சிவாச்சாரியார்
நியாயசிரோமணி, வித்தியாசாகரம்
கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்
திரு. வ. பரமசிவம்
(புனர்வாழ்வுக் கழகம் பொறுப்பதிகாரி நல்லூர்)
திரு. பொ. பாலசிங்கம்
(யாழ். மாநகரசபை ஆணையாளர்)
திரு. க. சொக்கலிங்கம்
(M. A. (சௌவில் கொந்தணி அதிபர்)

பாராட்டுரை:
திரு. இ. இளங்கோவன்
(உதவி பிரதேச செயலர் நல்லூர்)
திரு. சி. கனகரட்ணம்
(J.P U.M. திவ்யஜீவனசங்கத் தலைவர் நல்லூர்)
திரு. தீ. சிறீஸ்கந்தராசா
(தலைவர், சங்கிலியன் மன்றம் இலங்கை வங்கி உத்தியோகத்தர்)
திரு. இ. சந்திரகுமார்
(கிராமசேவையாளர், நல்லூர்)

தேவஸ்தானம் சர்பாக பொன்னாடை போர்த்தி தங்கப்பதக்கம் அணிந்து கௌரவிப்போர்:

உயர்திரு. கா. மாணிக்கவாசகர்
(அரசாங்க அதிபரும், மாவட்ட ஆணையாளரும், யாழ். மாவட்டம்)
உயர்திரு. ச. இராசலிங்கம்
(பரஸ்கோ உரிமையாளர்)

பதிலுரை:
விழாநாயகர்கள்

நன்றியுரை:
தேவஸ்தானம்

27-07-94

தேவஸ்தான சமய அறிவுப் போட்டி பரிசில் வழங்கல்

திரு. இ. வாமதேவன்
(இராசா டீசல் உரிமையாளர்)

தொண்டர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கல்

திரு. க. பாக்கியராஜா
(வேலாதோப்பு பாலசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்)

ஈழநல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

''கலைமாமணி'' S. S. சர்மா
விடயம்: வள்ளிதிருமணம்
நேரம்: 9-00 மணிக்கு

ஞானப்பிழம்பாக ஒளிரும் ஸ்ரீ பாலகதிர்காம முருகன்

ஈழவள நாட்டின் வடபால் சகல வளங்களும் பொலிந்து மலிந்து நிறைந்துள்ள நல்லைப் பதியின் கண்ணே—

தர்மத்தையும், நீதியையும் நிலைநாட்டி தமிழர் எனத் தலைநிமிர்ந்து செங்கோலோச்சிய சங்கிலி மன்னனின் இராஜதானியில் கருணையின் வடிவமாக நல்லைநாதன்—நல்லைநாயகி சமேதரராகக் காட்சியளிக்கும் அம்மை அப்பனின் அருட்கடாட்சம்பெற்று கல்வியில் உறைந்துள்ள கல்வியங்காடு என்னும் பொற்பதியில்—

நான்மறைகள் ஓதுகின்ற நாயகனின் வழியில்—

''வான்முகில் வழாது பெய்து மலிவளம் சுரக்கமன்னன் கோன்முறை அரசு செய்து குறைவிலாது உயிர்கள் வாழ நான்மறை அறங்கள் ஓங்க—'' அந்தணர் தோன்றலாக தியாகராஜ ஐயர் நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தார் அவர் என்ன காரணத்தினாலோ நேர்த்திக்கடன் செலுத்துவதற்காக அன்னக்காவடி எடுத்துக்கொண்டு பாதயாத்திரையாக பயங்கர மிருகங்கள் வாழும் காடுகளைக் கடந்து கதிர்காமம் சென்றடைந்தார். அங்கு அவர் சுவாமி வாசலில் காவடியில் இருந்த அன்னத்தைத் திறந்து சுவாமிக்கு நிவேதனம் செய்து தன் நிலை மறந்து, கண்ணீர் மல்கி வேதம் ஓதி பக்தியின் மேன்மையை வெளிப்படுத்தினார். அவர் முருகனுக்கு படைத்த நிவேதனம் அப்போது தான் அடுப்பில் இருந்து இறக்கப்பட்ட அமுது போன்று சூடாக, ஆவி போகக்கண்டு ஆனந்தமடைந்தார்.

தனது பக்திக்கு இரங்கிய பெருமானின் பாதாரவிந்தத்தை தஞ்சமடைந்து தங்கிய அவர் முருகனின் உத்தரவுப்படி தமக்குக் கிடைத்த ஞானசக்தி சொரூபத்தை ஆலய வாசலில் வைத்து பூசித்தார். அந்த ஞானப் பொக்கிஷத்தை அவர் எடுத்து வந்து தமது சொந்த நிலத்தில் சிறு ஆலயம் அமைத்து தமக்கும் தமது சந்ததியினருக்கும் ஆன்மார்த்த பூஜையாக அதை ஸ்தாபனம் செய்து வழிபட்டு வந்தார்.

சுவாமிநாதக் குருக்கள் சின்னையாக் குருக்கள், வைத்திலிங்கையர் ஆகியோர் தங்கள் ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டு ஆன்மார்த்த பூஜை வடிவில் தினமும் வழிபட்டு வந்தனர். காலப்போக்கில் வைத்திலிங்கையர் தம் அந்திம காலத்தில் கதிர்காமசுவாமி ஞானபொக்கிஷத்தை சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்களிடம் ஒப்படைத்தார் அவர் முருகனை அலங்கரித்தும் பக்தி சிரத்தையுடன் பூஜை வழிபாடுகள் செய்தும் வந்தார். தம்மிடம் ஒப்படைத்த ஞான பொக்கிஷத்தை அவர் மெய்யன்போடு வழிபட்டு வந்த காலத்தில் ''நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்றெண்ணி பாலகதிர்காம கந்தன் க்ஷேத்திரத்தில், இந்த ஞானபொக்கிஷத்தை கதிர்காமமுறைப்படி பக்தர்களும் வழிபட வழி அமைத்துக் கொடுத்தார்.

அன்பே வடிவான முருகனை, வேண்டுவார் வேண்டுவதை வேண்டியபடி அருளும் வள்ளலை, கலியுக வரதன் கந்தனை, ஞானசக்தி வடிவான வேலனை, ஷட்கோண மத்திய நிலையை சரவணபவன் என்னும் அட்சரத்துள் அமைந்து அனுக்கிரகிக்கும் கதிர்காமக் கந்தனை, மக்கள் எல்லாம் வழிபட்டு உய்ய ஸ்ரீ பாலகதிர்காமம் உருவானது.

குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் குடிகொள்வான் என்றாங்கு,

பிரபஞ்சமனைத்தும் ஒளிப்பிரவாகமாக, ஞானப்பிரவாகமாக, அருட்பிரவாகமாக, அன்புப்பிரவாகமாக தன் கருணையைப் பொழிந்து கொண்டிருக்கும் அந்தப் பரம்பொருளை, ஞானத்தின் திருவுருவை, நான்மறையின் தனித்துணையை, வானத்தின் மிசையன்றி மண்ணில் வந்த மதிக்கொழுந்தாகிய ஆறாவதனம் தாங்கி அடியோர் வதனமாகி கூறுசெய் ஞானவேலாகி, அப்சர வடிவாகி, அருவுருவ திருமேனி தாங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணிய பொருளை வழிபட்டு உய்வோமாக!

-செல். சசிகுமாரசர்மா-

*



பத்தரை அடி உயரமான ஐராவத யானை வாகனம்

நகரெங்கும் அருள் பொழிய வேல் ரதத்தில் முருகன் உலா

மறைகூறும் உண்மை எண்ணங்களின் பிரதிபலிப்பே இறைவனின் தத்துவம் தன் படைப்பில் எக்கணங்களில் நன்மையும், தீமையும் நடைபெறவேண்டுமோ அவ்வேளையில் இறை அருள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் மனமாகி, சித்தமாகி, அறிவாகி இந்தப் பிரபஞ்சத்தை ஆட்டுவிக்கின்றான்.

நூல்மேல் ஆடும் பொம்மை போல் ஆடுகின்றோம், பாடுகின்றோம், அசைகின்றோம். அவற்றின் நாயகன் அந்தப் பரம்பொருள். அவனின்றி ஓர் அணுவும் அசையாது.

நான்மறைகள் ஆட்டுகின்ற பரம்பொருளை நாம் தேடுகின்றோம், க்ஷேத்திரங்கள் அனைத்தையும் நாடுகின்றோம். மறைகளும் மறைந்தன்ன அவனை அந்த மாயப் பரம்பொருளை எங்கெங்கெல்லாம் தேடிய ஞானிகளும் முடிவில் கடந்து உள்ளே நிற்கின்ற அந்தப் பரம்பொருள் உள்ளக் குகையினுள்ளே அமைந்து மனமாகி சித்தமாகி அறிவாகி தன்னை உணர்த்துகின்றபோது அகங்காரவாதி நான் என்று சொல்லுகின்றான் ஆன்மீகவாதியோ அவன் அருள் என்று சொல்லுகின்றான். அவன் அருள் அன்றி வேறு எதுவுமே இல்லை.

குருமணியின் சித்தத்தில் உறைந்திருந்த பரம்பொருள் தன் அருட்பிரவாகத்தை மிளிரச் செய்ததே இந்தப் பாலகதிர்காமம். மனம் குவிகின்றபோது சிந்தனைகளும் செயல்களும் செயல்வடிவில் பிறப்பெடுக்கும். அவரின் கற்பனைச் சித்திரத்தினால் அமைக்கப்பட்டதே இந்தப் பாலகதிர்காம ஆலயத்தின் அமைப்பு.

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஆடிவேல் பவனி

25-07-94 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு இந்த ஊர்வலம் ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி வழியாக நண்பகல் 12-00 மணிக்கு வீரமாகாளி அம்மன் ஆலயத்தைச் சென்றடையும். அங்கிருந்து 2-00 மணிக்கு ஆரம்பமாகி யாழ்நகர் [illegible] வீதியூடாக மாலை 7-00 மணிக்கு வண்ணார் வண்ணை சிவன் கோயிலைச் சென்றடையும்.

26 07-94 செவ்வாய்க்காலை 6-00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு கா[illegible] வீதிவழியாக பகல் 12-00 மணிக்கு வண்ணை நாச்சிமார் அம்மன் ஆலயத்தை வந்தடையும். அங்கிருந்து 3-00 மணிக்கு புறப்பட்டு மாலை 7-00 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தை வந்தடையும்.

27-07-94 புதன் காலை 9 00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு திருநெல்வேலி வழியாக அரசடி சிவகாமசுந்தரி அம்மன் ஆலயத்தை பகல் 12-00 மணிக்கு வந்தடையும் மாலை 8-00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு கல்வியங்காடு [illegible] மணிக்கு [illegible] யும்.

தெய்வீக கலைப்பணி ஓங்குக!



தமிழீழ மண்ணிலே முதன்முறையாக யாழ். நகர் முழுவதும் பவனி வரும் வேல் ரதத்தை உருவாக்கி, சிற்பக் கலைப்பணியை ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் செய்துள்ளார் திருநெல்வேலி, தாலடி வேல் காளி கோயிலடியைச் சேர்ந்த அம்பாள் சிற்பாலயம் ஆறுமுகம் கந்தசாமி அவர்கள்.

திரு. கந்தசாமியும் அவரது உறவினர்களும் ஒன்று சேர்ந்து இரவு பகலாக விடா முயற்சியுடன் இவ்வேல் ரதத்தை சிறந்த முறையில் செய்து முடித்துள்ளனர். ஈழ மண்ணில் இத்தனவு சிறப்பாக— சேவை மனப்பான்மையுடன் திரு. ஆறுமுகம் அவர்கள் வேல் ரதத்தை உருவாக்கியுள்ளார்.

திரு. கந்தசாமி அவர்களின் தெய்வீக கலைப்பணி மென்மேலும் உயர்வடைய வாழ்த்துகள். இவ்விழாவின் வேல் ரதம் அவரது திறமைக்கு எடுத்துக்காட்டாகும்.

சிற்பச் சக்கரவர்த்தி, சிற்பக் கலாஜோதி ஆ. ஜீவரட்ணம், கலாஜோதி ஆ. தம்பித்துரை ஆகிய இருவரதும் பிரதம சிஷ்யருமாகிய திரு. ஆ. கந்தசாமிக்கு ஸ்ரீபாலகதிர்காம தேவஸ்தானத்தின் பாராட்டுக்கள் உரித்தாகுக.

தமிழீழ ஆடிவேல் விழா சிறப்புற வாழ்த்துவோர்!

க. செ. கைலாசம்பிள்ளை அன் கோ
மருந்துச் சரக்கு பலசரக்கு வியாபாரம்
958, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

சோ. தேவதாஸ்
பலசரக்கு வாணிபம் எஸ். ரி. ரேடர்ஸ்
நல்லூர் மார்க்கட், கல்வியங்காடு.

விவேகானந்தா களஞ்சியம்
(பலசரக்கு வியாபாரம்)
இல. 7, பருத்தித்துறை வீதி
நல்லூர் மார்க்கட், கல்வியங்காடு

இ. விக்னேஸ்வரன்
விதானையார் வீதி, நல்லூர்.

குலசி வாணிபம்
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.

எஸ் என். தெய்வேந்திரன்
இரும்பு வாணிபம்
பருத்தித்துறை வீதி, நல்லூர் மார்க்கட்.

கணேஸ் ரேக்ஸ்
கா: கணேசலிங்கம்
297, ஆடியபாதம் றோட்,
நல்லூர் மார்க்கட்டு. கல்வியங்காடு.

க. கந்தசாமி அன் சன்ஸ்
காவேரி சீயக்காய்ப் பவுடர் தயாரிப்பாளர்

சி கருணாநிதி
விநாயகர் ஸ்ரோர்ஸ் பலசரக்கு மாளிகை
பழஞ்சந்தியடி

சுகந்தினி மதுபானசாலை
பருத்தித்துறை வீதி, நல்லூர் மார்க்கட்.

சித்திராலயா
ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

நதியா ஜுவல்லறி
இல 2, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

சிவபிரம்மஸ்ரீ - சாம் - சோமாஸ்கந்த சர்மா
செயலாளர்
இந்து மத குருமார் ஒன்றியம்
110/12, சட்டநாதர் கோவில் பின் வீதி,
நல்லூர்

பேபி போட்டோ படப்பிடிப்பாளர்
பலாலி வீதி, திருநெல்வேலி.

ஆ. இராசையா அன் சன்ஸ்
மருந்துக்கடை
யாழ்ப்பாணம். திருநெல்வேலி.

கு ரவிச்செல்வம்
நியூ ஹப்பி ரெக்ஸ்
நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

இ. வாமதேவன்
இராசா டீசல்
பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம்.

அஜந்தா போட்டோ அன்ட் வீடியோ
சங்கிலியன் வீதி. நல்லூர்.

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

மேசை, கதிரை செற்றி, அலுமாரிகள், அழகு சாதன கண்ணாடி மேசை, டைப்ரைட்டர் மெஷின், சோகேஸ், கடைக்குரிய கவுண்டர் மேசை, சாப்பாட்டு மேசை, செப்பர் சைக்கிள் ½ சைக்கிள் வாங்கு விருல்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 07, கைலாசபிள்ளையார் கோயில் பின் வீதி, நல்லூர். [32006]

ஐஸ்பழம், ஐஸ்கிறீம் தயாரிக்கும் இயந்திரங்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த. கந்தசாமி, விக்வளை, தம்பளை, பருத்தித்துறை. (31976)

2 போத்தல் பால் எடுக்கும் ஜமுனாபாரி ஆடும், அதன் 15 நாள் நிரம்பிய கடாய், மறிக்குட்டிகளும், 5 மாத ஜமுனாபாரி கடாயும் விற்பனைக்குண்டு. ஆ. கனகசிங்கம், 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (32059)

அடைவைக்கக் கூடிய நல்ல இன கோழிமுட்டைகள், பன்டம், வான்கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் (32063)

கோழிக்குஞ்சு விற்பனை

Prima Christombu. Broiler குஞ்சுகள் சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் பதிவு செய்து சிறு தொகையில் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (32061)

இறைச்சிக் கோழி

புறொயிலர் இறைச்சிக் கோழி சனி, ஞாயிறு தினங்களில் சுத்தம் செய்து கொடுக்கப்படும். [வெலிங்டன் சந்தி அறிவகம் அருகில்] 382, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [31838]

தேவை

தங்கியிருந்து ஆடுகள், கோழிகள் பராமரிப்பதற்கு ஓர் ஆண் குடும்பஸ்தர் தேவை. குடும்பமாகவும் தங்கியிருக்க வசதியுண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (32063)

மணிக்கூடுகள் திருத்துதல்

சகல மணிக்கூடுகள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளடில்கா வாச் அன்ட் றேடியோ வேர்க்ஸ், ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை, கண்டி வீதி, சாவகச்சேரி, தலைமையகம் 284, வானவில் அருகில் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (இ-8299)

புலமைப் பரிசில் பரீட்சை

Bond நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள் எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும் கணிதம், தமிழ் விடைகளுடன் ரூபா 10/- மட்டும். [7445]

ஜோதிட விஞ்ஞானம்

வான வெள்ளி மோதல்கள் நான்கு வருடங்களுக்கு பூமியில் படிப்படியான பாரிய விளைவுகளை உண்டாக்கும். மன்னர்கள், நாட்டுத் தலைவர்களின் மரணம் கதிர் வீச்சினால் நோய்கள், பூமியதிர்ச்சி, எரிமலை, விமான விபத்துகள் அணு ஆயுதங்களால் அழிவுகளையும் உள்நாட்டு யுத்தங்களையும் ஏற்படுத்தும். சத்யா கட்டுடை. [7278]

மணமக்கள் தேவை

குற்றமற்ற 35, 32, 34 வயது டாக்டர்களுக்கும், 36 வயது பட்டதாரி ஆசிரியருக்கும். 33 வயது B. Sc ஆசிரியைக்கும் தேவை மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [32060]

அன்பளிப்பு

சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ பேருரையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 450 கிராம் சவைப் பவுடர் வாங்குபவர்களுக்கு சுவாமி விவேகானந்தரின் பலவர்ணப் படம் அன்பளிப்பாக வழங்குகிறோம். "மின்க்லைவ்" [இ-8781]

வெளிவந்து விற்பனையாகிறது!

இலங்கை நிருவாக சேவைக்குரிய
S. L. A. S. விலை 175/-
இலங்கை கல்வி நிருவாக சேவைக்குரிய
S. L. E. A. S. விலை 215/-

வெளியீடு:
அஸ்ரன் பதிப்பகம்
எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம்.
(ஒ/8643)

நன்றி நவில்கின்றோம்

எமது
தந்தையார்
வே. தம்பையா
அவர்களுக்கு

மிகச் சிறப்பாக 22-06-94 இல் வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன் கோயிலில் மணிவிழாவை நடத்திய மணிவிழாக் குழுவினருக்கும் சகல ஒத்துழைப்பும் நல்கிய கலைநகர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினருக்கும், கலைநகர் - வட்டூர் பொதுமக்களுக்கும், ஊர்வலத்திலும், விழாவிலும் கலந்து கொண்டு சிறப்பித்த அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் ஆகியோருக்கும் —

கலைநகர் நேருஜி ச. ச. நிலையத்தினருக்கும், மணிவிழா மலருக்கு ஆசியுரை, வாழ்த்துரை, பாராட்டுரை, அணிந்துரை வழங்கிய அறிஞர்களுக்கும், மணிவிழாவில் கலந்து கொண்டு ஆசியுரை, பாராட்டுரை நிகழ்த்திய அறிஞர்களுக்கும், கலை நிகழ்ச்சிகள் அளித்த சங்கங்களிற்கும், தனி நபர்களுக்கும் —

மணிவிழா மலருக்கு சிறந்த அட்டைப்படத்தை தயாரித்து தந்த சித்திரச் செல்வன் திரு ஆ. ஞானசேகரம், ஞானம் ஆட்ஸ் சங்கானை அவர்களுக்கும், மணிவிழா மலரை குறைந்த நாட்களில் அழகாக அச்சிட்டுத் தந்த திருமகள் அச்சகம், சுன்னாகம் கண்ணன் அச்சகம், நல்லூர் ஆகியோருக்கும் —

மணிவிழா தொடர்பாக செய்திகள் பிரசுரித்த பத்திரிகைகளுக்கும், சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும், எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

- பிள்ளைகள்:

கலைபதம்,
கலைநகர், சித்தன்கேணி. [32012]

ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்
உயர்திரு செ. சபாபதிப்பிள்ளை

தோற்றம்: 07 - 05 - 1920
மறைவு: 04 - 08 - 1993
திதி: 24 - 07 - 1994 (ஞாயிறு)

எங்கள் முன்னேற்றத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த "வழிகாட்டி"யாக உறுதுணையாய் நின்ற அன்புத் தெய்வமே! எங்களைவிட்டு இறைவனடி சேர்ந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் அன்பு, பாசம், அறிவுரைகள் தொண்டுகள் என்றென்றும் எங்கள் உள்ளங்களை விட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்.

குறிப்பு: இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்று இன்று 24-07-1994 அவரது இல்லத்தில் நடைபெறும் மதிய விருந்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

அன்பு மனைவியும், மக்களும், மருமக்களும்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

சபா விற்பனை நிலையம்,
அச்சுவேலி. (32056)

மூன்றாவது பிறந்த தின வாழ்த்து

(24 - 07 - 1994)

செல்வன் பசீலன்

நெல்லியடி, கரவெட்டி மேற்கைச் சேர்ந்த சிவலிங்கம் அமுதமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வன் பசீலன் தனது மூன்றாவது பிறந்த தினத்தை இன்று (24 - 07 - 94) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். பசீலனை அப்பா, அம்மா, தங்கை துஷியந்தி, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பா, சித்தி, பெரியப்பா, பெரியன்ரி, சித்தி, அத்தை, மாமா, அண்ணா, அக்கா, தம்பி, தங்கை, கிளி அங்கிள், அத்தை, பிரான்ஸில் இருந்து பெரிய அங்கிள், அத்தை குடும்பம், நவம் அப்பப்பா, அம்மம்மா குடும்பம், இரத்தினம் அம்மம்மா குடும்பம், ஜேர்மனில் இருந்து தருமு அப்பப்பா, அப்பம்மா குடும்பம், தெய்வேந்திரம் பெரியப்பா, குணாளன் சித்தப்பா, சித்தி குடும்பம், லங்கன் மச்சான், சவூதியில் இருந்து ஜெகா அங்கிள், மோகன் அங்கிள், நாதன் அங்கிள், இராசன் அங்கிள், தேவன் மச்சான் சுவிஸில் இருந்து குலம் மச்சான், அவுஸ்ரேலியாவில் இருந்து வஜி சித்தப்பா, நாயன்மார்கட்டு அம்மம்மா, பெரியம்மா, மச்சான்மார், மச்சாள்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, சித்திமார், மாமா, மாமிமார், அப்பப்பா, அப்பம்மாமார், நண்பர்கள் உற்றார், உறவினர்கள் அனைவரும் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் அருளால் பல்கலையும் கற்று, சகல செளபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

(32055)

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி அரியமலர் சுந்தரலிங்கம்

அன்னையின் மடியில்: 27 — 07 — 1956
ஆண்டவன் அடியில்: 15 — 07 — 1992
திதி: 24 — 07 — 1994

ஈன்ற பொழுதில் பெரிதுவந்த எம்மவர்க்கு
மீண்டு வந்து காணக் காலனுன்னைத் தடுத்தனனே,
சேர்ந்த இடம் தனில் சேய்மதியாய் வாழ்ந்திருந்து
செய்த உதவிகள் தான் எத்தனையோ கோடியம்மா
போந்த இடந்தன்னில் பெயரெடுத்தோடும் பூவோடும்
புகழீட்டிப் போயினையே பொன்மகளே!
தங்கச்சி, தங்கச்சியென்று தவிக்குதம்மா நெஞ்சம்
எம்மவர்க்குத் தமிழையாய் அவதரித்தாய் குடும்பத்தில்,
பிரான்ஸில் உழைக்கவென்று அன்புடன் நீ
சென்றாய் அம்மா!
நேரிலும் காணவில்லை - உன்
உடலைத் தானும் பார்க்கவில்லை!
பிரான்ஸ் மண்ணதனில் மறைந்தனையோ
தாய் மண்படாமல்!
காலங்கள் சென்றாலும் ஆறாது என் நெஞ்சம்
வேகுதம்மா உடலெல்லாம்
செந்தணல் போல் காயுதம்மா!
மனத்துயரைத் தீர்த்திட வருவதெப்போ
பொன் மகளே?

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன் பிரிவால் வாடும்!
அம்மா, அண்ணா,
உறவினர்கள்.

சாந்த வளவு,
அளவெட்டி. [32037]

"நடுத்தர தொழில் நுட்ப ஊழியருக்கு சம்பள உயர்வு

நடுத்தர தொழில் நுட்ப சேவையாளர்களின் சம்பளத்தை மீளாய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்ட சம்பளக் கமிட்டி செய்த சிபார்சுகளை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க அங்கீகரித்துள்ளார்.

நடுத்தர தொழில் நுட்ப சேவையில் உள்ளவர்களின் சம்பளங்கள் பின்வருமாறு அடிப்படையில் மீளமைக்கப்பட்டுள்ளன.

வகுப்பு 2 பி: 30, 060 ரூபாவிலிருந்து 40, 980 ரூபா வரை. வகுப்பு 2 ஏ: 37, 200 ரூபாவிலிருந்து 51, 120 ரூபா வரை. வகுப்பு 1: 42, 720 ரூபாவிலிருந்து 60, 120 ரூபா வரை விசேட வகுப்பு 460, 80 ரூபாவிலிருந்து, 64 800 ரூபா வரை.

புதியசம்பள விகிதம் 199 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டது. (ஊ)

G. C. C.

வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்

514/14, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கண், காது, மூக்கு தொண்டை (ENT), முறிவு, மகப்பேறு, சத்திர சிகிச்சை, பொதுவைத்தியம், சிறுபிள்ளைக்குரிய வைத்தியம், சருமநோய்கள் என்பவற்றிற்கு விசேடவைத்திய நிபுணர்களினால் ஆலோசனை வழங்கப்படுவதுடன் ஆய்வுகூட சேவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

(யாழ். அரசாங்க வைத்தியசாலை முன்பாக)

- நிர்வாகி

(32469)

தாவடி
அருள்மிகு அம்பலவாண கந்தசுவாமி கோயில்
இளம் தொண்டர் சபையினர்
வழங்கும்
அலங்காரப் பெருவிழா

காலம்: இன்று (24 - 07 - 1994) ஞாயிறு
நேரம்: இரவு 7மணிக்கு
1ஆவது நிகழ்ச்சி:
விசேட நாதஸ்வரக் கச்சேரி
2ஆவது நிகழ்ச்சி;
இன்னிசை கானம்

S. G. சாந்தன் குழுவினர்

முருகப்பெருமான் அடியார்கள் அனைவரையும் திரண்டு வந்து இவ் வெள்ளித்தில் நிகழ்ச்சிகளை கண்டு களிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

— இளம் தொண்டர் சபையினர்.

அன்பளிப்பு!
கே. கே. இராசரத்தினம் நகை மாளிகை
277, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
[32065]

கலைமகள் கல்வி நிலையம்

G. A. Q. - புதிய பிரிவு - 94/95

யாழ்ப்பாண பல்கலைக்கழக புதிய வெளிவாரி மாணவர்களுக்கான வகுப்புகள் 25-07-94 பி. ப. 3-00மணிக்கு ஆரம்பமாகின்றன,

- நிர்வாகி

சோலை அம்மன் கோயிலடி,
மீசாலை; (32067)

வாழ்த்துகிறோம்

மீசாலை, சோலை அம்மன் கோயிலடி,
கலைமகள் கல்வி நிலையத்தில்
கல்வி கற்பித்து எம்மைச் சித்திபெற வழிகாட்டிய அனைத்து ஆசிரியர்களையும் வாழ்த்தி நன்றி கூறுகிறோம்.

யாழ். பல்கலைக்கழக
வெளிவாரி இறுதியாண்டு மாணவர்கள்.
(32068)

15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 13 01 1951
மறைவு: 24 07 1979

மாணிக்கவாசகர் குகலோஜன்

அன்புடன் நினைவு கூரும்:
அம்மா, தம்பி, சகோதரிகள்.

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை. (31999)

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

சாபம் தீர...

சாபம் தீராதா?

இங்கு ஸ்ரீலங்காவில் இன்று பலராலும் கேட்கப்படும் கேள்வி இது.

'17 ஆண்டு கால சாபம் தீராதா ?'' — ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரமுகர்கள் அரசியல் மேடைகளில் எழுப்பும் வினா இது.

''ஏழு ஆண்டு கால சாபம் திரும்பவும் வேண்டுமோ?'' — இது ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியினர் பொதுமக்களிடம் எழுப்பும் கேள்வி.

''ஏழு ஆண்டு கால சாப ஆட்சியினாலோ 17 ஆண்டு கால சாப ஆட்சியினாலோ மக்களுக்கு விடிவு ஏற்படப் போவதில்லை''. — ஜே. வி. பியின் மக்கள் முற்போக்கு முன்னணிப்பேச்சாளர் கடந்த வியாழன் இரவு கு வாஹிலியில் தேர்தல் பிரசார உரை நிகழ்த்தியபோது கூறியது இது.

அரசியல் கட்சிகள் இவ்வாறு சாபம் குறித்து பிரஸ்தாபித்துக் கொண்டிருக்கையில் சிங்கள மக்கள் வேறு விதமாக நினைக்கிறார்கள்.

''1948 இல் சுதந்திரம் கிடைத்த முதல் இந்த 46 ஆண்டு காலமாக இந்த நாட்டைப் பிடித்திருக்கும் சாபம் நீங்காதா?'' — இதுதான் சிங்களவர் மத்தியில் இன்று கேட்கப்படும் கேள்வி.

தீர்க்கதரிசனமற்ற — குறுகிய நோக்குடைய — சுயநலப் பார்வைமிக்க — அரசியல்வாதிகளிடம் ஸ்ரீலங்கா நாடு சிக்கி அழிந்துகொண்டிருப்பதைப் பார்த்து அந்த மக்கள் இயலாமையுடன் தங்களிடம் தாங்களே இவ்வாறு கேள்வி எழுப்பிக்கொள்கிறார்கள்.

இத்தகைய நிலை ஈழத் தமிழருக்கும் இருந்தது.

இலங்கை சுதந்திரம்பெற்ற காலம் முதல் சிங்களவர்களால் அடிமைப்படுத்தப்பட்ட ஈழத் தமிழர்கள், தங்கள் மீதான சாபம் தீராதா என அங்கலாய்த்த காலம் ஒன்று இருந்தது! இயலாமையுடன் மனவேதனைப்பட்ட சூழ்நிலை காணப்பட்டது.

ஆனால் இன்று அந்த நிலை இல்லை.

தங்கள் மீதான சாபத்தை தாங்களே துடைத்தெறிந்து தங்களுக்குரிய விடுதலை வாழ்க்கையைத் தாங்களே அமைத்துக்கொள்ள அவர்கள் புறப்பட்டு விட்டார்கள். இந்தப் பயணம் இப்போது முன்னேறிக் கொண்டிருக்கிறது. இது யதார்த்தபூர்வமான உண்மை

சாபத்தை நீக்கப் பரிகாரம் என்னவென்பதைக் கண்டு அதன் வழி தமது பாதையை வகுப்பதில் அவர்கள் சரியாக செயற்பட்டார்கள்; செயற்படுகிறார்கள்;

பிழையான தலைமைத்துவத்தை அவர்கள் நிராகரித்தார்கள்; சுதந்திரத்துக்காக உயிரைக் கொடுத்துப் போராடுவது என்ற வழிகாட்டலைப் பின்பற்றினார்கள்.

அடிமைப்படுத்தப்பட்ட சிறுபான்மை இனம் இன்று விறுகொண்டு எழுந்து தனக்கு என தனியான அரசு அமைப்பதற்கு முனைந்திருக்கிறது என்றால் அதற்குக் காரணம் இந்த வழிகாட்டல்தான்.

சிங்கள மக்களும் தங்களின் சாபம் தீர வேண்டும் என்றால் — அமைதியான — சமாதானமான — பொருளாதார சுபீட்சம் மிக்க — வாழ்க்கை வாழ வேண்டும் என்றால் ஈழத்தமிழர்களின் முன்மாதிரியிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்.

இனவாதம் பேசி — ஆட்சியைக் கைப்பற்றி — யுத்தத்தின் பேரால் பணத்தைக் கொள்ளையிடும் சிங்கள இனவாதத் தலைவர்களை இந்தப் பொதுத்தேர்தல் மூலமும் வேறு வழிகளிலும் நிராகரிக்க வேண்டும். சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பேணி, அவர்களின் சுயநிர்ணய உரிமையை மதித்து, சகல இனங்களுடனும் நட்புறவை வளர்க்க கூடியவர்களை இனங்கண்டு தமது தலைவர்களாக அவர்கள் தெரிவுசெய்ய வேண்டும். அத்தகையவர்கள் இம்முறை தேர்தலில் போட்டியிடுகிறார்களா என்பதனை முதலில் கண்டறிய வேண்டும்.

அப்போதுதான் அவர்களைப் பிடித்திருக்கும் சாபம் தீரும்.

தெற்கில் இரு அணிகளும் தேர்தல் சண்டித்தனம்; வாக்களிப்பை அடுத்து இரத்தக் களரி நிச்சயம்!

யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே!

தென்னிலங்கையில் தேர்தல் முடிந்ததும், பெரும் கலவரம் ஒன்று வெடிக்கும் என்பதற்கான சகல விதமான மணி ஓசைகளும் அங்கு ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

தேர்தலில் வென்று வந்தால் மக்களுக்கு என்ன நலன்களைச் செய்யப் போகிறார்கள்; நாட்டின் அபிவிருத்திக்கு என்னென்ன திட்டங்களை வகுத்திருக்கிறார்கள்; தங்களது அரசியல், பொருளாதார, சமூகக் கொள்கைகள் என்ன? இவற்றை மக்களுக்குத் தெரியப்படுத்துவதே ஜனநாயக மரபுக்கு உகந்த தேர்தல் பிரசாரம்.

கொழும்பில் குண்டர்களின் குண்டுகள் வெடிக்கும் ஆபத்து

வேண்டுமானால் தாங்கள் இதுவரை நடைமுறைப்படுத்திய வெற்றித் திட்டங்களையும், அவற்றின் நல்விளைவுகளையும் மக்களுக்கு எடுத்துக் கூறலாம். எதிரணியினர் விட்ட தவறுகளை மக்களுக்கு எடுத்துக் கூறுவதிலும் தப்பு ஒன்றுமில்லை

ஆனால் இலங்கை அரசியல் அந்தளவுக்கு நாகரிகமாக இருக்கும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது; எதிர்பார்க்கவும் இல்லை. ஓர் அணியினரை மற்ற அணியினர் தூற்றுவதும், கண்டிப்பதும், ஏசுவதுமே தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் நடத்தப்படுவதற்கான நோக்கம் என்ற கருத்து இலங்கை அரசியல்வாதிகளுக்கு இன்று நேற்று உதித்ததல்ல.

பொய்யான, நடைமுறைச் சாத்தியம் இல்லாத வாக்குறுதிகளை அள்ளி வீசுவதற்கும், எதிரணி வேட்பாளரையும், அவரது கட்சியையும் தூற்றுவதற்கும், கண்டிப்பதற்குமே தேர்தல் மேடைகள் இங்கு பயன்படுத்தப்படுகின்றன.

அரசியல்

கடந்த பல பொதுத் தேர்தல்களிலும் இவையே தேர்தல் பிரசார நடைமுறைகளாக இருந்து வருகின்றன. தேர்தல் பிரசாரம் கட்சி மோதல்களிலும், காடைத்தனங்களிலும் முடிவது இலங்கையில் ஒன்றும் புதியதல்ல!

ஆனால் வேறு எந்தத் தடவையையும் விட, இம்முறை தேர்தல் பிரசாரம் பெரிதும் சண்டித்தனம் நிறைந்ததாகக் காணப்படுகிறது. இதற்குத் தகுந்த காரணமும் உண்டு.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி கடந்த 17 வருடங்களாகத் தொடர்ந்து நடைபெற்றது அதனால் சிங்கள மக்களுக்கு அக்கட்சி மீது இயல்பாகவே வெறுப்பு ஏற்பட்டுள்ளது. எனவே அவர்கள் இம்முறை ஆட்சியை மாற்றுவதற்கே விரும்புவார்கள்

இதனை ஐக்கிய தேசியக் கட்சி முழுமையாக உணர்ந்து கொண்டிருக்கிறது பதவி, சுகபோகம், அதிகாரத்தனம் என்பவற்றை இழப்பதற்கு யாருக்குத் தான் இலகுவில் மனம் வரும்? அதனால் எப்படியாவது தனது அடாவடித்தனத்தைச் செயலாக்கிப் பதவியை மீண்டும் பிடிப்பதற்கு அந்தக் கட்சி கொடுக்குக் கட்டி நிற்கிறது!

எதிரணியும் தடியுடன்

எதிரணியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பதினேழு வருடங்களாக பதவி, அதிகாரம் இன்றி நலிந்து போயிருந்தது. தென்மாகாண சபைத் தேர்தலின் போது அதற்கு ஓரளவு ஊட்டமளிக்கப்பட்டது அந்தப் புதுத்தெம்புடன் எப்படியாவது ஆட்சி பீடத்தில் ஏறிவிட வேண்டும் என்ற ஆசை அதற்கு.

தனது அந்த ஆசைக்குத் தடையாக வர ஐ தே கட்சி முயலும் போது சுதந்திரக் கட்சிக்கு கோபமும், ஆத்திரமும் வருவது நிச்சயம்; தவிர்க்க முடியாதது என்று கூடச் சொல்லலாம். எனவே தனது வெற்றிக்கு ஐக்கிய தேசியக் கட்சி தடையாக இருக்கும் பட்சத்தில் தானும் தடியுடன் நிற்க வேண்டும் என்று நினைத்து அது செயற்படுகிறது.

அதனால் தெற்குத் தேர்தல் பிரசாரம் சண்டித்தனம் மிகுந்து காணப்படுகிறது தேர்தல் வன்செயல்கள் நாளாந்தம் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட இம்மாதம் 11ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையான பத்து நாட்களில் மட்டும் மொத்தம் 435 தேர்தல் வன்செயல்கள் குறித்துப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (முறைப்பாடு செய்யப்படாமல் நடந்து முடிந்த தேர்தல் வன்செயல்கள் இதனைவிட அதிக எண்ணிக்கையாக இருக்கலாம்.) பத்து நாட்களில் ஆறு அரசியல் கொலைகளும் நடந்திருக்கின்றன!

மேலும் —

தேர்தல் கால வன்செயல்கள் குறைவதற்கான அறிகுறி எதுவும் இல்லை. காரணம் — இரண்டு அணியினரும் சண்டித்தனம் குறித்துப் பகிரங்கமாகக் கூறி வருகிறார்கள். நாங்கள் உங்களை விடச் சண்டித்தவர்கள் [illegible] என்று ''வீராவேசம்'' காட்டுகிறார்கள்!

'இந்தத் தேர்தலில் மார்க்சிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்றால் இலங்கையில் இரத்தக்களரி ஏற்படும்'' — என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா விடுத்த உத்தியோகபூர்வ அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்!

இதே வரிசையில் ஐ தே க. அரசின் மூத்த அமைச்சர்களில் ஒருவரும், சபை முதல்வருமாக இருந்த விஜேபால மென்டிஸ் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில், ''சுதந்திரக் கட்சியின் சண்டித்தனங்களுக்கு மக்களும் நாங்களும் பயப்படப் போவதில்லை'' என்று தாம் சண்டித்தனம் பேசியிருக்கிறார்,

இரு தரப்பும் ஆபத்தும்

அடுத்த பக்கத்தில், பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர்களில் ஒருவரான இ வி குணரத்னா, ''பொ. ஐ மு. தேர்தலில் வென்றால் அமைதியை உறுதி செய்வதற்காக நான் வீதிகளில் நிற்பேன்'' என்று தேர்தல் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

''ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகியவர்கள் பலரும் பொ. ஐ. மு. வென்றால் இரத்தக்களரி உண்டாகும்'' என்று கூறித்திரிவதாக சந்திரிகா கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்

'ஐ. தே. கட்சி உறுப்பினர்களைப் பயமுறுத்தும் நடவடிக்கைகளில் எதிரணி அங்கத்தவர்கள் ஈடுபடுகிறார்கள்'' என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்கா கூறியிருக்கிறார்.

இவ்வாறு ஒரு தரப்பினர் மறுபக்கத்தினரை வன்செயலில் ஈடுபடுகிறார்கள், ஈடுபடப் போகிறார்கள் என்று கூறுவதன் அர்த்தம், இரு சாராருமே தாம் வன்செயல்களைப் புரிந்துவிட்டு அடுத்தவர் தலையில் பழிபோடுவதற்கு ஆயத்தமாகிறார்கள் என்பதே ஆகும்!

ஆகையால், தென்னிலங்கையில் தேர்தல் பிரசார காலத்தில் வன்செயல்கள் நாளும் பொழுதும் அதிகரித்துவரும். பொலீஸாரால் அதனைத் தடுக்கவே முடியாது. தேர்தல் சுவரொட்டிகள் பதாகைகள் ஒட்டுவதையும் கட்டுவதையுமே நிறுத்தமுடியாத பொலீஸாரால், தேர்தல் வன்செயல்களை தடுப்பது எப்படிச் சாத்தியம்?

தேர்தல் பிரசார கால வன்செயல்கள் தேர்தல் முடிந்ததும் இரத்தக் களரியாக மாறும். பொ. ஐ. முன்னணி வென்றால் மட்டும் தான் இரத்தக் களரி ஏற்படும் என்பதல்ல. தப்பித் தவறி ஐ. தே. கவுக்கு சிறிதளவான வெற்றி வாய்ப்புக் கிடைத்தாலும் இரத்தக் களரி ஏற்படவே செய்யும்

இதனை நன்கு தெரிந்து கொண்டே இளைப்பாறிய இராணுவத்தினரும், தொண்டர் படையினரும் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள். பொலீஸாரால் மட்டும் தேர்தல் கால கலவரத்தை அடக்கிவிட முடியாது என்று கருதியே அவர்களையும் சேவையில் ஈடுபடுத்த அரசு முடிவு செய்திருக்கிறது.

இராணுவத்தினரில் 90 சதவீதத்தினரும் வடக்கு-கிழக்கு முகாம்களில் உள்ளார்கள். தேர்தல் அமைதியை நிலைநாட்டுவதற்காக அவர்களைத் தெற்கே அழைக்க முடியாது. தேர்தல் காலத்தில் புலிகள் எந்த நேரமும் தாக்குதல்களை நடத்துவார்கள் என்ற அச்சம் பாதுகாப்புப் படையினருக்கு உண்டு.

இனப்பிரச்சினைக்குரிய தீர்வாக பொ. ஐ. மு. விடம் வெறுங் கோது

அதனால் தெற்கில் தேர்தல் வன்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னாள் இராணுவ வீரர்களையும், தொண்டர் படையினரையும் அரசு ஈடுபடுத்தப்போகிறது.

இவ்வாறு எந்த ஏற்பாடுகளைச் செய்தாலும், தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான அணியினருமே சண்டித்தனத்தில் இறங்குவதற்கு முடிவு செய்து விட்ட பிறகு, தெற்கில் தேர்தல் இரத்தக் களரியைத் தடுப்பது என்பது இயலாத காரியம். அது பெரிய அளவிலோ, சிறிய அளவிலோ நடந்தே தீரும்.

★ ★ ★

குண்டுகள் வெடிக்கலாம்!

தேர்தல் வாக்களிப்பு முடிந்து, முடிவுகள் வெளியாகும் கையோடு பெரும் கலவரம் வெடிக்கும் நிலை இப்போதே தெரிவதாக கொழும்பிலிருந்து வந்தவர்கள் தெரிவிக்கிறார்கள். அந்தப் பெருந்தீக்கான புகை இப்போதே புகைந்து கொண்டிருப்பதாக ஒருவர் வர்ணித்தார்

தேர்தலை முன்னிட்டு எந்த நேரமும், எந்த இடத்திலும், வெடிகுண்டுகள் திடீர் திடீரென வெடிக்கலாம் என்ற அச்சம் கொழும்பிலும், அதன் சுற்றுப்புறங்களிலும வாழும் மக்களிடையே நிலவுகிறது. தேர்தல் நெருங்கும் நாட்களில் அரசுக்கு ஆதரவான குண்டர்களே குண்டுகளை வைக்கலாம் என்று கொழும்பில் விடயமறிந்த வட்டாரங்கள் பேசிக்கொள்கின்றனவாம்!

வெடிகுண்டுக் கிலியினால் கொழும்பில் உள்ள வெளிநாடுகளின் தூதரகங்கள் தேர்தலுக்கு நான்கு, ஐந்து நாட்களுக்கு முன்னரே மூடப்பட்டுவிடும் என ராஜதந்திர வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

தேர்தல் காலத்தில் தமது நாட்டுப் பிரஜைகள் உல்லாசப் பயணம் மேற்கொண்டு ஸ்ரீலங்காவுக்கு வருவதை நிறுத்துமாறு கொழும்பில் உள்ள பல வெளிநாட்டுத் தூதரகங்களும் தமது அரசுகளுக்கு அறிவுறுத்தி இருப்பதாகவும் அறியவந்துள்ளது.

கொழும்பிலும் சந்திரிகா அலை

இதேவேளை, கொழும்பு தலைநகரில் சந்திரிகா [illegible] இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஐக்கிய தேசியக்கட்சியின் கோட்டையான கொழும்பு தெற்கு, கொழும்பு மத்தி ஆகிய பகுதிகளில் சந்திரிகாவுக்கே ஆதரவு காணப்படுகிறது.

ஸ்ரீலங்காவின் கிராமப் பகுதிகளிலும் சந்திரிகா அலையே பெரிதாக வீசுகிறது. நீல — சிவப்புக் கொடிகளே எங்கும் பறக்கின்றன. சந்திரிகாவின் படங்களுடன் பெரிய பதாகைகள் தொங்குகின்றன. பச்சை நிறக் கொடிகளை சிங்களக் கிராமப் பகுதிகளில் காண்பது அரிதாகவே உள்ளது.

கம்பஹா, அனுராதபுரம், பொலனறுவைப் பகுதியிலும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கே ஆதரவு தெரிகிறது என்று கொழும்பிலிருந்து உத்தியோகபூர்வ அலுவலாக அப் பகுதிகளுக்குச் சென்று வந்த அன்பர் ஒருவர் தெரிவித்தார். அப்பகுதிகள் அனேகமாக நீலக்கொடிகள் மயமாகவே காட்சி அளிப்பதாகவும் அவர் கூறினார்.

பொதுவாக, பொதுத் தேர்தலில் பொ ஐ முன்னணியே வெல்லும் என்று பரவலாகக் கருதப்படுகிறது!

★ ★ ★

விஞ்ஞாபனம் வெறும கோது

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, அனேகமாக, ஆட்சி அமைக்கக் கூடிய ஆசனபலத்துடன் வெல்லலாம் என்றே இப்போதைய மதிப்பீடு இறுதி நேரத்தில் அதில் மாற்றம் ஏற்படலாம்; ஏற்படாதும் போகலாம்:

அந்த முன்னணி ஆட்சிக்கு வந்தால் தமிழர் பிரச்சினை விவகாரத்தில் ஒரு திருப்பம் இல்லாவிடினும் சிறுமாற்றமாவது வரும் என்று தமிழர்கள் மத்தியில் ஓர் அபிப்பிராயம் நிலவுகிறது.

தேர்தலுக்கு முன்னர், பொ. ஐ முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில், இனப்பிரச்சினை சம்பந்தமான தீர்வு யோசனை தெரிவிக்கப்படும் என்று கூறப்பட்டது. ஆனால் அண்மையில் வெளியிடப்பட்ட முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் அதனைப் பொய்யாக்கி விட்டது!

அந்த விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சினை சம்பந்தமாக பெரிதாக முத்தாய்ப்பு வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் திட்டவட்டமான, தெளிவான யோசனை எதுவும் இல்லை

அவசரமாகத் தீர்வு காணப்பட வேண்டிய அதிமுக்கியமானதும் சிக்கலானதுமான பிரச்சினை இனப்பிரச்சினை என்று நாம் நம்புகிறோம். இனப்பிரச்சினைக்கு உகந்த முறையில தீர்வைக் கண்டு, சமாதானம், அமைதியை மீண்டும் நிலைநாட்டாத பட்சத்தில், பொருளாதார அபிவிருத்தி, சமூக முன்னேற்றம். அரசியல் உறுதிப்பாடு ஆகியவற்றை நோக்கிய எமது இலக்குகளை அடைவது என்பது சாத்தியமில்லை —

உயிருக்கும் உடைமைக்கும் ஏற்பட்ட பாரிய இழப்புக்களையும், முழு நாட்டினதும் முன்னேற்றத்துக்கு ஏற்பட்டிருக்கும் சவால்களையும் கருத்திற்கொண்டு, சகல சமூகத்தவர்களுக்கும் சமாதானத்தை உறுதிப்படுத்து முகமாக, இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு நாம் பற்றுறுதி கொண்டுள்ளோம் —

உயிருக்கும் உடைமைக்கும் ஏற்படும் அழிவுக்கு முடிவு கட்டுவதும், நாட்டின் சட்டம் ஒழுங்கு மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றை பேணுவதுமே எமது அடிப்படை நோக்கமாகும். — இவ்வாறு அந்த முத்தாய்ப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சவாலாகவே தெரிகிறது

அதிலும் கூட — ''முழு நாட்டினதும் முன்னேற்றத்துக்கு ஏற்பட்டிருக்கும் சவால்களையும் கருத்திற் கொண்டு ..'' என்ற வாசகம் இனப்பிரச்சினையை ஒரு சவாலாகவே முன்னணி கருதுகிறது; பிரச்சினையாகக் கருதவில்லை என்ற மறைபொருளைத் தருகிறது சவால் என்றால் எதிர்மோதுவதாகும். பிரச்சினை என்றால் சம்பந்தப்பட்டவர்களுடன் சேர்ந்து தீர்த்து வைப்பதாகும்.

மேலும் சீனி பூசப்பட்ட இந்த முகவுரையைத் தொடர்ந்து வரும் பிரதான உள்ளடக்கம் எதனையும் திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை இவ்வாறு தெரிவித்தால் சிங்களப் பேரினவாதத்தின் எதிர்ப்பைச் சம்பாதிக்க நேரிடும் என்ற அச்சம் காரணமாக அது வெறும் கோதாகவே விடப்பட்டுள்ளது.

அந்தக் கோது இது தான்:- உண்மையானதும் போதியளவுமான அதிகாரப்பரவலாக்கலை நடைமுறைப் படுத்துவதில் நாம் நம்பிக்கை கொண்டிருக்கிறோம் —

இனப்பிரச்சினையுடனும் அதிகாரப்பரவலாக்கலுடனும் தொடர்புடைய பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வொன்றைக் காணுமுகமாக புவியியல், பொருளாதார மற்றும் சமூகக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு புதிய நிர்வாகப் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி உறுதி கொண்டிருக்கிறது —

அதிகாரம் பரவலாக்கப்படும் புதிய நிர்வாக பிரிவுகளை உருவாக்குவதற்கான அரசியலமைப்பு திருத்தங்கள் கொண்டு வரும் போது ஏற்புடைய தீர்வொன்றைக் காணும் நோக்கில் சகல சமூகங்களினதும் கருத்துக்களை அறிந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை பொதுஜன ஐக்கிய முன்னணி மேற்கொள்ளும் — என்று பொ. ஐ. முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கே தமிழர்கள் ஒன்றை மறந்துவிடக்கூடாது பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதான அங்கம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே. சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இடையில் இனப்பிரச்சினையில் தமிழர் விவகாரத்தில் எவ்வித வித்தியாசமும் இல்லை.

உதயகாந்தன்

சந்திரிகா குமாரணதுங்கா புதுமைவாதியாகவும், தாராள ஜனநாயக வாதியாகவும் இருப்பதால் சுதந்திரக் கட்சி தனது சொந்த உருவத்தை மாற்றிவிட்டது என்று கருதக்கூடாது.

ஒற்றையாட்சிக்குள்ளேயே இனப்பிரச்சினை தீர்க்கப்படும் என்று அவர் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கூறியிருக்கிறார்.

அவரது அணியில் சேர்ந்துள்ள பேராசிரியர் ஜி எல். பீரிஸ், கலாநிதி வர்ணபாலா ஜெயதேவா உயன்கொட ஆகியோரின் சமஷ்டி கோட்பாட்டை சந்திரிகா உள்வாங்கியதாகக் கருதமுடியவில்லை.

பொ. ஐ. முன்னணி வென்றால் அதன் தேசியப்பட்டியலில் இருந்து நாடாளுமன்றம் செல்லவிருக்கும் சிறிமாவோ பிரதமராக வருவார் என்பதிலும் உள்ளார்ந்த அர்த்தம் உண்டு. இனப்பிரச்சினை விவகாரத்தில் சிங்களப் பேரினவாதத்தின் பிடியை விட்டுக்கொடுக்காமல் இருப்பதற்காகவே சிறிமா பிரதமராகும் திட்டம் பிரஸ்தாபிக்கப்படுகிறது சந்திரிகா (இளங்கன்று) பயமறியாது சுதந்திரக் கட்சியின் பேரினவாத கோட்பாட்டுக்கு முரணாகத் தமிழர்களுக்கு ஏதாவது கூடுதலாக வழங்கி விடக்கூடாது என்பதில் சிறிமாவோ பெரிதும் கவனமாகவே இருப்பார்.

ஆகவே பொ. ஐ. முன்னணி ஆட்சிக்கு வந்தால் தமிழர் விவகாரத்தில் பெரிதாக ஒரு திருப்பம் உண்டாகும் என்று கருதுவது யதார்த்தத்துக்குப் புறம்பானதாகும்.

★

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

நிரந்தர...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றன.

விலைவாசி உயர்வு உலக நாடுகளுக்குப் பொதுவானது; அதைக் கட்டுப்படுத்த முடியாது என்று கூறிவந்த டி. பி. அரசு இப்போது தேர்தல் குண்டுகளாக திடீர் திடீரென பொருட்களின் விலையைக் குறைக்கும் அறிவிப்பை விடுக்கிறது.

உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைக்கவும், வேலை வாய்ப்பை அதிகரிக்கவும், சுகாதார சேவைகளை சீர்செய்யவும், கல்வித்துறையில் மாற்றங்களைக் கொண்டு வரவும், அனைத்து இன மக்களும் ஒன்று பட்டு வாழவும் பல்வேறு திட்டங்களை நாம் தீட்டியுள்ளோம். — இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

(உ)

நகரெங்கும்..:

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாலயத்தில் திரை நீக்காது ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற பொருள்பட மக்கள் அனைவரும் ''அரோகரா'' என்ற கோஷத்துடன் எம்பெருமானை வழிபடுகின்றனர். ஆடம்பர அலங்கார பூஜைகள் இன்றி, மாவிளக்கு, கற்பூரச்சட்டி, நெய்தீபம் முதலிய தீபங்கள் மட்டுமே இறைவனின் ஆராதனைத் தீபமாக காட்டப்படுகின்றன.

மயிலின் தோகைகளால் அமைக்கப்பட்ட சாவடிச் செண்டினால் விசிறுகின்ற காற்றின் அசைவு முருகனுக்கு வழிபாட்டுச்சின்னமாக அமைகிறது அவ்வேளையில் பக்தர்களின் ''அரோகரா'' என்னும்கோஷம் எம்பெருமானை தாலாட்டும் இசையாக அமைகிறது. பக்தர்களின் கூட்டம் 'தொழுவையர், அழுவையர், விழுவையர் ஒருபால் சென்னியில் கஞ்சலி கூப்பினர் ஒருபால் ஆர்' — மெய்மறந்த பக்தி உடன் வழிபடுகின்றனர்.

மலையில் இருந்து பாய்கின்ற மாணிக்கக்கங்கை விநாயகனை வலம் வந்து செல்லுகின்ற இடம் மாணிக்கப்பிள்ளையார் சன்னிதானம். அவ்வாறே இவ் ஆலயத்திலும் நீர் தேங்கி நிற்கும் பிரவாகத்தின் நடுவில் விநாயகப்பெருமான் வீற்றிருக்கின்றார்.

அதனைத் தொடர்ந்து விபூதிமலைக் கந்தன், கதிரமலைக்கந்தன், வள்ளிமலை, சரவணப்பொய்கை ஆகியன அமைக்கப்பெற்று கதிர்காம ஷேத்திரத்தை நினைவு கூறுகின்றன அவரின் கற்பனை எண்ணங்களில் ஒன்று பத்தரை அடி உயரமாக உள்ள பிரமாண்டமான ஐராவதயானை அமைக்கப்பட வேண்டும் என்பது.

அதன்படி அவரின் எண்ணங்களின் பிரதிபலிப்பாக 26-07-91இல் சிற்ப ஜோதி விஸ்வப் பிரம்மஸ்ரீ சு. இராஜரட்ணம் என்பவரால் கலைவண்ணங்களுடன் தத்ரூபமாக ஐராவதயானை அமைக்கப்பட்டது. அவரின் ஆசியுடன் 25-07-94இல் வேல்ரதம் உருவாக்கப்பெற்று யாழ். நகர் அனைத்தும் கோலாகலமாக பவனி வர உள்ளது

ஆத்மாக்கள் என்றும் அழிவதில்லை. அதன் நினைவுகள் காலத்திற்கு காலம் தொடர்ந்து நிலை பெறுகின்றது. ஆத்மஜோதியாக சுடர்விட்டு, எண்ண அலைகள் தொடர்ந்து மிளிர்கின்றன. இந்த சமஸ்தாபகர் தியாகராஜ ஐயர் குருபகார்த்த சின்னமாகும்.

''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.''

தொகுப்பு:
செல்வன். சௌபாக்கிய
சசிகுமார சர்மா
(யாழ். இந்துவின் மைந்தன்)

பொருளோடு பெண் வேண்டும் எனக கேட்கும் மதியீனம்
இருக்கும் மட்டுமே இது என்றும் வழிகோலும

மணிவிழாக் காணும்

கல்வியியற்றுறைத் தலைவர்

பேராசிரியர் உயர்திரு வ. ஆறுமுகம்

அகவை அறுபது கண்டு மணிவிழாக்காணும் பேராசிரியர் உயர்திரு வ. ஆறுமுகம் இலங்கையின் முதுபெரும் கல்விமான்களில் ஒருவர். கல்விப் பயிர் செழித்த வடமராட்சியில் - துன்னாலையில் பிறந்து கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி, பருத்தித்துறை இருதயக் கல்லூரி ஆகியவற்றில் கல்விகற்ற இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனையில் தமிழ் விசேட கலைமாணிப்பட்டம் பெற்று கல்வியுலகில் கால்பதித்தார். அதே பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வித்தகைமையினையும், லண்டன் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும் பெற்று, கல்வியியலில் முதுதத்துவமாணிப் பட்டத்தையும் லண்டன் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார். இவ்வாண்மையின் மூலம் கல்விப்புலத்தின் துறைதோய்ந்த வித்தகராகத் திகழ்ந்தார்.

இரத்மலானை இந்துக்கல்லூரி, மருதானை சாகிராக்கல்லூரி, கோட்டமுனை மகா வித்தியாலயம் ஆகியவற்றில் நல்லாசானாகக் கடமையாற்றிய பின் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக இணைந்து, சிரேஷ்ட விரிவுரையாளராக கொழும்பு பல்கலைக் கழகத்திலும் 1980களின் பின் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் விளங்கினார். 1988முதல் கல்வித்துறைத் தலைவராக விளங்கும் பேராசிரியர் சிந்தனையிற் தெளிவும், சேவை கருமங்களில் பற்றுதியும் மிக்கவர். எக்கருமத்தையும் திட்டமிட்டு செயலாற்றும் முறையும், திட்டமிட்டவாறே குறித்த நேரத்தில் குறித்த கருமங்களைச் செய்து முடிக்கும் பாங்கும் ஒவ்வொருவராலும் பின்பற்றப்பட வேண்டியவை.

கல்வியுலகுக்கு பயன்படக் கூடியவகையில் தமது கற்பித்தல் அனுபவங்களின் சாரமாக வெளியிட்ட ''வகுப்பறைக் கற்பித்தல்'' எனும் நூல் கல்வியுலகால் பெரிதும் வரவேற்கப்பட்டது. அதேபோல் தமது கல்வித்துறை அனுபவங்களையும், ஆற்றலையும், துறை சார்ந்த நுண்ணறிவினையும் ஒன்று திரட்டி அவ்வப்போது ஆற்றிய பேருரைகளின் தொகுப்பு நூலாகிய ''கல்விப் பாரம்பரியங்கள்'' எனும் நூல் மணி விழா அன்று வெளியிடவிருப்பதறிந்து பேருவகை கொள்கின்றோம்.

1989இல் தேசியரீதியிலான கல்வியாளருக்கான விருது இலவசக் கல்வியின் தந்தையான சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா அவர்களின் நூற்றாண்டு விழாவில் வழங்கப்பட்டமை இவரின் ஈடிணையற்ற கல்விச் சேவைக்கு அளிக்கப்பட்ட கௌரவமாகும். பேராசிரியர் அவர்களின் கல்விச் சேவை தொடர, நிறைந்த சுகத்தையும், நீடிய ஆயுளையும் பேராசிரியர் அவர்களுக்கு வழங்க வேண்டுமென இறைவனை இறைஞ்சுகின்றோம்.

கல்விக்கழகம்,
கல்வியியற்றுறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

[32058]

மரண அறிவித்தல்

வர்ணகுலசிங்கம் அருந்தவமலர் (சாந்தா)

கட்டுவனைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு அருளம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும், வர்ணகுலசிங்கத்தின் அன்பு மனைவியும், மரியநாயகம் சின்னம்மா தம்பதிகளின் மூத்த மருமகளுமாகிய அருந்தவமலர் 18-7-94இல் கொழும்பில் காலமானார்.

இவர் வத்சலா, தர்சினி, திலீபன், ராகுலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேந்திரராசா, சுரேந்திரராசா (கனடா), ரவீந்திரராசா (கனடா), அருந்தவராணி, சுவேந்திரராசா (ஜேர்மனி), அருந்தவநாயகி [ஜேர்மனி], ஜெயராஜா (ஜேர்மனி), அருந்தவரதி (கனடா) சிறீஸ்கந்தராசா (கனடா) ஆகியோரின் பாசச் சகோதரியும், சந்திரகுமார் (நீயூ சவ்யோ சுன்னாகம்), யோகநாதன் (நிர்மலா சுபேக வாசம்), அகிலாண்டதேவி, பிரமிலாதேவி, தயாரஞ்சன் (கொழும்பு), ஜெகநாதன் [சுவிஸ்], கௌசலாதேவி [டென்மார்க்], நிர்மலாதேவி [சுவிஸ்], உதயகுமாரி, சாந்தி [கனடா], சுமதி [கனடா], மனோகரன், சந்திரசேகரம் ஆகியோரின் மைத்துனியும், பத்மநாதன், சாரதாதேவி துரைராசா தம்பதிகளின் பெறாமகளும், சிவராசா தம்பதிகள், தர்மலிங்கம் தம்பதிகள், சின்னத்துரை தம்பதிகளின் மருமகளும், நல்லம்மாவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இவரின் இறுதிக் கிரியைகள் இன்று பி. ப. 2 மணியளவில் சண்டிலிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக களவெட்டி இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :-
ம. வர்ணகுலசிங்கம்
[கணவன்]

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

[7279]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 24 - 07 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பழைய மாணவர்
சங்கம்

நடத்தும்

யாழ். மத்திய கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழா

கிரிக்கெட் சுற்றுப்போட்டி

காலம்: ஜூலை **29, 30** ஆம் திகதிகள்
இடம் : யாழ் மத்திய கல்லூரி மைதானம்

விண்ணப்ப முடிவு திகதி:
27 – 07 – 1994 புதன் மாலை 5 மணி
தொடர்ந்து

அணி ஒழுங்குத் தெரிவு: மாலை **5·30** மணி
அனுமதிக் கட்டணம்: ரூபா **100/-**

இறுதி நாள் நிகழ்ச்சிகள்

காலம்: 01-08-1994 திங்கட்கிழமை மாலை 4 மணி
(யாழ். மத்திய கல்லூரி நாள்)

தலைவர்:
டாக்டர் எஸ் பி, ஆர், சீர்மாறன்
(தலைவர், பழைய மாணவர் சங்கம்)

பிரதம விருந்தினர்:
டாக்டர் எஸ், குகதாசன்
(சத்திர சிகிச்சை நிபுணர் யாழ். போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்கள்:
திரு. என். கே. சண்முகநாதபிள்ளை
(அதிபர் யா. ம. க , காப்பாளர் - ப. மா. ச)
திரு. கா. மாணிக்கவாசகர்
(உப-காப்பாளர், அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம்)
பேராசிரியர் வி. நவரட்ணராஜா
(உப-காப்பாளர், ப. மா. ச.)
கலாநிதி என். எதிர்வீரசிங்கம் (Ph D)
(உப-காப்பாளர், ப. மா. ச.)
லயன் எஸ். இராமகிருஷ்ணன்
முன்னைநாள் தலைவர், உப-காப்பாளர் ப. மா. ச.
திரு எஸ். சோதிலிங்கம்
(முகாமையாளர், ஹட்டன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம். தலைவர்-சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழகம்.)

அரை இறுதி/இறுதி போட்டிகள் 4 மணி

பரிசளிப்பு:
டாக்டர் எஸ். குகதாசன்

பங்குகொள்ளும் அனைத்து வீரர்களுக்கும்

கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவு சான்றிதழ்களும், வெற்றி அணி வீரர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும், 1 ஆம், 2 ஆம், 3 ஆம் அணிகளுக்கு வெற்றிக் கேடயங்களும் வழங்கப்படும்.

ஆறு பந்து பரிமாற்றங்கள் கொண்ட ''தோல் பந்த (LEATHER BALL)'' போட்டியில் பங்குகொள்ள விரும்பும் ஆறு பேர் கொண்ட அணியின் கழகங்கள்

செயலாளர்
சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்
யாழ் மத்திய கல்லூரி
உடன் தொடர்பு கொள்ளவும்

நன்றியுரை:
திரு. எஸ். பிரேம்குமார்
(செயலாளர், சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்)

பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், நண்பர்களை அழைக்கின்றோம்.

என். இராஜதேவன்
செயலாளர் (ப. மா. ச.)

அன்பளிப்பு:

பேரரசி வண்ணச்சோலை

(மகாராணி ரெக்ஸ்ரைல்ஸ்)
MAHARANI TEXTILES
50, GRAND. BAZAAR, JAFFNA:
50. சோதியா தெரு. யாழ்ப்பாணம்.
(சி-8783)

மரண அறிவித்தல்

திருமதி வைத்தியநாதன் செல்லம்மா

(சிகாமணி)
நெடுந்தீவு மத்தி

19-07-94 செவ்வாய்க்கிழமை காலை சிவபதமடைந்த திருமதி வைத்தியநாதன் செல்லம்மா அவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று (24-07-94) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பி. ப. 3-00மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
[illegible]
(மகன்)

261/7, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
[illegible]

தாக்குதலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி ஊடாக அண்மையில் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரியால் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவுக்கு தகவல் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் உற்சவ காலத்தின் போது யாழ். மாநகரசபை பிரதேசத்திலுள்ள வீதிகளில் பக்தர்களின் நடமாட்டம் அதிகரித்திருக்கும்எனவும் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்தத் தகவலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நல்லூர் உற்சவம் அடுத்த மாதம் 12 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-4)

சதிச்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இச்சம்பவம் நடந்த சமயம் ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு அருகில் இருந்த அமைச்சர் நந்திமா மதியூ, மேடை இடிந்து விழுந்ததில் சதிச்செயல் எதுவுமில்லை என்று தெரிவித்துள்ளார்.

மேடை சரியான முறையில் அமைக்கப்படாததால் தான் அது இடிந்து விழுந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

(உ-எ)

மரண அறிவித்தல்கள்

செல்வி

கனகு (சாம்பசிவம்) கஜபாலினி

கொட்டடி 91/11, காரை நகர் வீதியைச் சேர்ந்த செல்வி கனகு [சாம்பசிவம்] கஜபாலினி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகு [சாம்பசிவம்] திருமதி கனகு மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்பு புதல்வியும் கஜனி, கஜநேசன், கஜநந்தினியின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 24-7-94 பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:-
கஜநேசன்
[கண்ணாடி]
சகோதரன்

[32074]

சின்னத்துரை பாக்கியலெட்சுமி

(கண்மணி)

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 424, கே கே. எஸ். வீதி (பண்டிக்குட்டி பிள்ளையார் கோயில் முன்பாக) யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான சின்னத்துரை பாக்கியலெட்சுமி 23 - 07 - 94 இல் சிவபதமடைந்தார். இவர் காலஞ்சென்ற மருதப்பு சின்னத்துரையின் அன்பு மனைவியாவார்.

இவரின் இறுதிக் கிரியைகள் இன்று 24 - 07 - 94 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி. ப. 3 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
சி. சசிகாந்தன்
(மகன்)
424, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.

(32073)

மெல்லிசைக் கலைஞர்

A R. சிறிகிருஷ்ணமூர்த்தி

(யாழ். மாநகரசபை ஊழியர்)

மெல்லிசைக் கலைஞர் A.R. சிறிகிருஷ்ணமூர்த்தி நேற்று இரவு (23-7-94) காலமாகி விட்டார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (25-7-94) பிற்பகல் 2 மணிக்கு 19/1, B. A. தம்பி ஒழுங்கை வண்ணார்பண்ணை என்ற முகவரியில் உள்ள அவரின் இல்லத்தில் இருந்து கோம்பயன்மணல் மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சி. தர்மசீலன்
(கண்ணன்)

(சி-8784)

லண்டனில்...!

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

இலங்கைக்கு ஆயுதம் வழங்குவதை நிறுத்துமாறும் தமிழர் தாயகத்துக்கு எதிரான பொருளாதாரத் தடையை நீக்குமாறும் பேரணியில் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

பாராட்டு விழா

சுதுமலை தெற்கு எச்சாட்டி வீதியைச் சேர்ந்த திரு. திருமதி ஜெயக்குமாரன் தம்பதிகளின் செல்வப் புதல்வனும் மானிப்பாய் இந்துக் கல்லூரி 7 ஆம் ஆண்டு மாணவனும், சுதுமலை சங்கப்பண்ணிசை வகுப்பு மாணவனும் ஆகிய

செல்வன் ஜெ. தயாபரன்

26 - 06 - 1994 இல் இணுவில் திருநெறிய தமிழ் மறைக் கழகம் நடத்திய பண்ணிசைப் போட்டியில் பங்குபற்றி கீழ்ப்பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றமைக்காக அம்மன்றத்தினரால் இன்று 24-07 1994 மாலை 6 30 மணிக்கு இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில், அவருக்குத் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளமையை எமது உறவினர், நண்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரியத்தருகின்றோம்.

இவ்வைபவத்திற்குத் தாங்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்கும்படியும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
திரு திருமதி ஜெயக்குமாரன்
(பெற்றோர்)

[32072]

உ
ஸ்ரீராம ஜெயம்

ஓராண்டு நினைவில்

உதயம்
10
–
07
–
1926

அஸ்தமனம்
04
–
08
–
1993

சிவஸ்ரீ சி. வரதராஜக்குருக்கள்

(சமஸ்கிருத பண்டிதர்)
திதி 24 – 07 – 1994

எல்லோரும் போற்றும் உத்தமராய்
வாழ்ந்த எங்கள் அன்புத் தந்தைக்கு
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகிறோம்

— பிள்ளைகள்,

விசவத்தனை முருகன் கோயில்,
பண்ணாகம்.

[32071]